★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஐப்பசி 1 ஜுல்கஜ் 30 இதழ் 247

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 18—10—82

## பொது மக்களின் ஒத்துழைப்பை பிரிகேடியர் கோருகிறார்

[யாழ்ப்பாணம்]

''ஜனாதிபதி தேர்தலின் போது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டக் கடமையாற்றும் அரசு அதிகாரிகளுக்கு உதவி அளிக்கும் முகமாகவே வடபதிக்கு அதிகளவு இராணுவப் படையினர் வந்துள்ளனர். இதனையிட்டு பொதுமக்கள் எவரும் பீதியடையத் தேவையில்லை' என்று வடபகுதி இராணுவ முகாம்களின் பொறுப்பதிகாரி பிரிகேடியர் ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'ஜனநாயகமுறையில் இம்மாதம் 20-ம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் பொதுமக்கள் நற்பிரஜைகளாக நடந்து கொள்ளவேண்டும். பொதுமக்களினதும் வாக்காளர்களினதும் ஒத்துழைப்பையே இராணுவத்தினர் நாடியுள்ளனர்' என்றும் பிரிகேடியர் தெரிவித்துள்ளார்.

## எம் பி.மகன் கைது

[இரத்தினபுரி]

இரத்தினபுரி எம்.பி. திரு. புஞ்சிநிலம மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் துப்பாக்கியால் மேல் நோக்கி சுட்டு குழப்பம் விளைவித்திருந்தாராம்.

### ★ இலங்கை கிரிக்கெட் வீரர்களின் 'விளையாட்டு!'

# அரசின் தடையையும் மீறி தென்னாபிரிக்கா சுற்று விஜயம்!

## 7 வாரம் தங்கி நிற்பார்கள்; ஒரு லட்சம் டாலர் கிடைக்கும்

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கத்தின் கடுமையான எச்சரிக்கையையும், தடையையும் மீறி, பதினன்கு கிரிக்கெட் வீரர்கள் தென்னாபிரிக்காவுக்குச் சென்றுள்ளனர்!**

**இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் தென்னாபிரிக்காவில் ஏழு வாரகாலம் சுற்று விஜயம் செய்து, பல போட்டிகளில் கலந்துகொள்வார்கள்.**

தென்னாபிரிக்க அரசாங்கத்தின் இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில் அங்கு சுற்று விஜயம்செய்யவும், கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ளவும் இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்திருந்தது.

ஆனாலும் இலங்கை அரசாங்கத்தின் தடை உத்தரவையும் மீறி பதினன்கு வீரர்கள் ஹொங்கொங் வழியாகத் தென்னாபிரிக்க விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

### பந்துலா காப்டன்

இக்கிரிக்கெட் குழுவுக்குத் திரு. பந்துல வர்ணபுர தலைமைவகிப்பதாகத் தெரியவருகிறது.

தென்னாபிரிக்காவுக்கு வருமாறு இலங்கைக் கிரிக்கெட் குழுவுக்கு அழைப்புவிடுக்கப் பட்டபோது இலங்கை அரசினால், அழைப்பு நிராகரிக்கப் பட்டு, தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் வீரர்கள் செல்லக் கூடாதென்றும் தடை உத்தரவு விதித்திருந்தது.

### இருவர்... மூவராக...

பதினன்கு கிரிக்கெட் வீரர்களும் இருவர் மூவராக கட்டுநாயக்கவிமானநிலையம்சென்று நேற்றுஹொங்கொங்புறப்பட்டனர் என்றும், அங்கிருந்து தென்னாபிரிக்கா செல்வார்கள் என்றும் செய்திகள் தெரிவித்தன. பதினன்கு கிரிக்கெட் வீரர்களில் ஐவர், அண்மையில் இலங்கை—இந்திய கிரிக்கெட் டெஸ்டில் விளையாடியவர்களாவர்.

### லட்சம் டாலர்

தென்னாபிரிக்காவில் பலகிரிக்கெட்போட்டிகளிலும் கலந்துகொள்ளும் இலங்கை வீரர்களுக்கு 75.000 முதல் 1,50,000 டாலர்வரைகிடைக்கும் இதனை தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சங்கம் வழங்கும்.

### நடவடிக்கை எடுக்கப்படும்

இலங்கை கிரிக்கெட்வீரர்களின் தென்னாபிரிக்க விஜயம் குறிதது இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கடுமையாக நடவடிக்கை எடுக்கும் என்று அறிவித்துள்ளது.

## வொண்டர் லைற் சோப் ஸ்தாபன
### விசேட அறிவித்தல்

எமது தயாரிப்பான ''வொண்டர்லைற் சோப்'' விநியோகஸ்தர்களாக வடமாகாணத்திற்குப் பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை எமது வியாபாரிகளுக்கும் பாவனையாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

வியாபாரிகள் தங்கள் தேவைகளுக்கு அவர்களுடன் தொடர்புகொள்ளவும். இவர்களைத் தவிர வேறு எவரையும் விநியோகஸ்தர்களாக வடமாகாணத்திற்கு நியமிக்கவில்லை என்பதையும் அறியத்தருகிறோம்.

(1) சேகர் விநியோக நிலையம்,
(SEGAR DISTRIBUTION CENTRE)
இல: 102,—3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(2) குகன் ஸ்டோர்ஸ்,
இல: 180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(3) S. V. முருகேசு,
இல: 154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(4) நிராஸ் என்டபிறைஸ்,
இல: 136, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

(4876)

## குட்டிமணிக்கு ஏற்பட்ட புதிய 'அனுபவம்'

(கொழும்பு)

ஏழாலை கிராமிய வங்கிக் கொள்ளை வழக்கு சம்பந்தமாக நேற்றுமுன்தினம் கொழும்பு மேல்நீதிமன்றத்துக்குகொண்டு வரப்பட்ட குட்டிமணியை அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணியும், தமிழர் கூட்டணித் தலைவருமான திரு. எம். சிவசிதம்பரமும், சட்டத்தரணி எஸ். நவரத்தினமும் [கரிகாலன்] கைகுலுக்கி பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவித்தார்கள்.

வட்டுக்கோட்டை எம். பி. யாக குட்டிமணியை தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவு

(8-ம் பக்கம் பார்க்க)

## 2 இராணுவவீரர் விபத்தில்பலி!

[மட்டக்களப்பு]

அப்பாறையிலிருந்து தேர்தல் பாதுகாப்புக்காக மட்டக்களப்புக்கு இராணுவ வாகனத்தில் வந்த இராணுவ வீரர்கள் சம்மாந்துறையில் வாகனம் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் கோப்ரல் டீசன்ஸ், சாரதி பெரேரா ஆகியோர் இருவரும் பலியானார்கள் 27 இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

## பெரியகடை தீ விபத்து: விசாரணைக்குழு அறிக்கை நாளை கையளிக்கப்படும்?

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழன் இரவு யாழ். பெரிய கடையில் ஏற்பட்ட தீ விபத்துத் தொடர்பாக யாழ். மாநகர சபையினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு நேற்று விசாரணையை ஆரம்பித்துள்ளது.

தீ விபத்தினை நேரில் கண்டதாகக் கூறப்பட்ட பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர் ஒருவரை விசாரணைக்குழு இன்று விசாரிக்கவுள்ளது. விசாரணைக்குழுவின் அறிக்கை நாளை செவ்வாய்க்கிழமை யாழ். மேயர் திரு. இராஜா விசுவநாதனிடம் கையளிக்கப் படும்

மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே சிவஞானம் தலைமையிலுள்ள விசாரணைக்குழுவில் மாநகரசபை உறுப்பினர்கள் திரு செல்லத்துரை, திரு. எஸ், குமரவேல், யாழ். மாநகரசபை மின் பொறியியலாளர் திரு. லோகராசா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

(மா)

## இராணுவ முகாமில் மருந்துவழங்காமல் தாக்கப்பட்டாராம்!

(கொழும்பு)

'பனாகொடை இராணுவ முகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் சின்னக் கண்டு பாலசிங்கம் ஆஸ்த்மா நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார். ஆஸ்த்மா காரணமாக அவர் வாந்தி எடுத்தபோது இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளார். மருந்து வழங்கவும், இராணுவத்தினரின் தக்குதலை நிறுத்தவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்' இவ்வாறு சட்டத்தரணி செ சந்திரகாசன் இராணுவத் தளபதிக்கு அனுப்பிவைத்துள்ள அவசரத் தந்தியில் கோரியுள்ளார்.

'புதிய பாதை' பத்திரிகையின் ஆசிரியரான சின்னக் கண்டு பாலசிங்கம், பனாகொடை இராணுவமுகாமில் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ளார். இம்மாதம் பதினோராம் திகதி முதல் அவர் ஆஸ்த்மா நோயி

[8ம் பக்கம் பார்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு ரெம்பிள் வீதியில் சாரதா மகளிர் கல்லூரி அருகாமையில் 4½ பரப்புக்காணி (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு விபரங்கட்கு; சி. தாமோதரம்பிள்ளை நந்தாவில் அம்மன் கோவிலடி, கோண்டாவில். 4850

கொழும்புத்துறையில் வளன்புரம், யோசப் வீதி, இல 92 இல் 1½ பரப்பு காணி கிணற்றுடன்விற்பனைக்குண்டு தொடர்பு: P.ஜோர்ஜ், 11 A, வளன்புரம், கொழும்புத்துறை. 4863

நேரடியாக இறக்குமதி செய்த புனரமைக்கப்பெற்ற CD 125, C 90, C 70 HONDA மோட்டார் சைக்கிள்களும், DELICA வான்களும், ELF ISUZU டிரக் வண்டிகளும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன்கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 4857

ஒருமாத அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. யோகானந்தா, தபால் நிலைய வீதி, சாவகச்சேரி. 4871

## தேவை

''யாழ்ப்பாணம் கன்னுதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானத்திற்கு நைவேத்தியங்கள் போடத் தெரிந்த உதவி அர்ச்சகர் ஒருவர் உடன் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன்காலை 9 மணிக்கு முன் நேரில் வரவும்''. ஆ சோமநாதன், பொருளாளர், அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம். கன்னுதிட்டி-யாழ்ப்பாணம். 4872

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

காரைநகர்கிழக்கு, காரைநகர் என்னும் இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னப்பு செல்லத்துரை கைம்பெண் சுந்தரம்மாவின் மரணசாதனமில்லா மரணச்சொத்து விடயத்தில்.

—மரணமெய்தியவர்

செல்லத்துரை தங்கராசா, களபூமி, காரைநகர் கிழக்கு, காரைநகர்

—மனுதாரர்

மரணசாதன ) நியாயாதிக்கம் இல.3466-(40)

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கட பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி.

பதிவாளர்.

1982 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம 7ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 4838

வவனிக்குளம் கொலைவழக்கு:

# கொலைக்குற்றச்சாட்டில் எதிரிவிடுதலை; கொலைமுயற்சிக்கு 10 வருடக்கடூழியம்!

[வவனியா]

வவுனிக்குளம் செல்வபுரம் கொலைவழக்கில் எதிரிவிடுதலை. கொலைமுயற்சி குற்றச்சாட்டில் எதிரிக்கு பத்துவருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

இவ்வழக்கில் 1977ம் ஆண்டு ஜூன் 6ம் திகதி செல்வம் இராஜரட்ணம் அல்லது தகர என்பவர் இதே இடத்தைச் சேர்ந்த இவரது மாமன் வைத்திலிங்கம் சுபபிரமணியம்என்பவரை சுட்டுக் கொலைசெய்ததாகவும், சுப்பிரமணியம் பத்மாவதி, சுப்பிரமணியம் மகாதேவா என்பவர்களை கொலைசெய்ய எத்தனித்து, கடுங்காயம்விளைவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வவனியா மேல் நீதி மன்றத்தில் நீதிபதி திரு. ஜே ஜி. அசீர்வாதம் முன் தமிழ்பேசும் ஜூரிசபைமுன்னிலையில்கடந்த வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் 9 பேர் சாட்சியம் அளித்துள்ளனர். 7 நாள் விசாரணையின் பின் கொலைக் குற்றச் சாட்டுக்கு எதிரி சுற்றவாளி என ஜூரி சபையினர் தெரிவித்தனர்.

இரண்டாம் குற்றச்சாட்டான கொலைமுயற்சிக்கு எதிரி குற்றவாளியாக காணப்பட்டார்.

மூன்றும் குற்றச் சாட்டுக்கு எதிரி சுற்றவாளி என ஜூரி சபையினர் தெரிவித்தனர்.

இந்த வழக்கில் எதிரி, எதிரிக் கூட்டில் நின்றபடியே நீதிமன்றத்துக்கு வாக்குமூலம் ஒன்றையும் அளித்தார்.

அரசதரப்பில் சட்டத்தரணி திரு. கே. எஸ். சிறிகந்த குமாரும், எதிரி தரப்பில் சட்டத்தரணி திரு. எஸ். செல்வமுருகானந்தனும் ஆஜராகியிருந்தனர்.

திர்ப்பு அளிக்கப்பட்ட இறுதி நாளன்று நீதிமன்ற வளவினுள் பெருந்தொகையான மக்கள் தீர்ப்பை அறிவதற்காக திரண்டிருந்தனர். (க)

## உடற்கல்வி வகுப்பு

[கரவெட்டி]

உடுப்பிட்டி, பருத்தித்துறை கல்வி வட்டாரங்களிலுள்ள சுகாதாரம், உடற்கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு அடுத்த மாதம் முதல் வாரத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் மேற்கொண்டுவருகிறார். [க]

## உதைபந்தாட்டம்

[வவனியா]

பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி இம்முறை வவனியாவில் நடைபெற்று வருகின்றது.

வவனியா தமிழ் மகாவித்தியாலய மாணவர் குழுவுக்கும் காமினி சிங்கள மகா வித்தியாலய மாணவர் குழுவுக்கும் இடையிலான போட்டி வவனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது இப்போட்டிக்கு விளையாட்டு அதிகாரி திரு. ஏ. எஸ். குணரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.

இப்போட்டியில் தமிழ் மகாவித்தியாலய மாணவர் குழு இரண்டு கோல்களைப்போட்டு வெற்றி பெற்றது.

## பின்னுறுதிக் கட்டளை

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பரஞ்சோதி என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்கள் சம்பந்தமான விடயத்தில்.

—மரணமெய்தியவர்

கணபதிப்பிள்ளை பரஞ்சோதி கைம்பெண் ஜெயமணி, அச்சுவேலி.

—மனுதார்

எதிராக

மரணச்சொத்து ) நியாயாதிக்கம் ) ரி/137

(பராயமற்றவர்) 1. பரஞ்சோதி இளங்குமரன், தனது வழக்குப் பாதுகாவலர்
2. வேலுப்பிள்ளை செல்லத்தம்பி. மூலமாக இருவரும் அச்சுவேலி தெற்கு.

—எதிர்வாதிகள்

இவ்விடயம் 1982ம் ஆண்டு ஆனி மாதம் 13ம் திகதிமல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் முன்னிலையில் மனுதார் சார்பில் சட்டத்தரணி திரு ஜி.வி. பாலசிங்கம்அவர்கள்தோன்றி, 1982-6-3ம் திகதி கொண்ட மனுவிலும் சத்தியக்கூற்றிலும் கூறப்பட்ட கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்திலே நிரூபிக்கப்பட்டுள்ளதென திருப்தி அடைந்ததின் பேரில்,

1982ம் ஆண்டு புரட்டாதி மாதம் 1ம் திகதி காலை 9 மணிக்கு இந்தநீதிமன்றத்தின் முன் எதிர்மனுதார்கள் எதிர்க்காரணம் காட்டினாலன்றி மனுதார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பரஞ்சோதியின் விதவை என்ற முறையில் காலஞ்சென்றவரின் மரணச்சொத்து நிர்வாகப் பத்திரம் பெற உரித்துடையவர்என்றும் மரணச்சொத்து நிர்வாகப்பத்திரம் அவருக்கு வழங்கப்படுமென்றும் இத்தால் கட்டளையிடப்படுகின்றது. மேலும் பராயமற்ற 1ம் எதிர்வாதியிற் வழக்கில் பாதுகாவலராகமேன் சொல்லிய 2ம் எதிர்வாதி நியமிக்கப் பட்டுள்ளாரெனவும் இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

மேலும் பராயமற்ற 1ம் எதிர்வாதியை மேற்சொல்லிய 2ம் எதிர்வாதி 3-9-82ல் மன்றில் தெரிவித்தல் வேண்டும்

1982ம் ஆண்டு ஆனி மாதம் 13ந் திகதி.

(ஒப்பம்)

க. குணரத்தினம்,
பதில் மாவட்ட நீதிபதி,
மல்லாகம்.

தயாரித்தவர்:
க. வ. பாலசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.

1-9-82 பின்னுறுதிக் கட்டளைக்கு எதிர்க்காரணம் காட்டுவதற்கு 3-11-82 வரை நீடிக்கப்படுகின்றது.

ஒப்பம்)

க. குணரத்தினம்,
பதில் மாவட்ட நீதிபதி
4817

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, இல. 16, சுவாமியார் வீதி, காலஞ்சென்ற இராசையா சோமசுந்தரம் அவர்களின் மரணசாதனம் சம்பந்தமான விடயத்தில்.

—மரணமெய்தியவர்

சோமசுந்தரம் கமலாம்பாள், இல. 16, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

—மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்:
இலக்கம்: 3679

மேற்கூறிய இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காகவும் அவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காகவும் மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

இது விடயமாக, அக்கறை உள்ள ஆள் எவரும் 1982ம் வருடம் ஐப்பசி மாதம் முதலாம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக ஆக்கப்படலாகாது என்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982ம் ஆண்டு ஆனி மாதம் 23-ந் திகதி.

தா. குலஞானம்,
பதிவாளர்,

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

தயாரித்தவர்;
செல்வி சந்தானலக்ஷ்மி அபிமன்னசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.

14-10-82

காரணம் காட்டும் திகதி 19-11-82க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தா. குலஞானம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழப்பாணம
4837

## JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

Six month courses in:
(1) WELDING TECHNOLOGY
(2) ADVANCED WELDING

Will commence on 1st November, 1982

Application forms are available at the Institute Office.

Apply before 30th October, 1982.

4861 Director.

## THE CENTRAL FINANCE COMPANY LIMITED JAFFNA BRANCH

The following vacancies exist at our Jaffna Branch:

(1) TYPIST CUM CLERK (Male)

Qualifications:- G C.E (O/L) or S.S C. Fluent in English with a typing speed of 35-40 w. p.m.

Age: Not more than 45 years.

Salary: Negotiable

Preferance would be given to those residing in close proximity to the Branch office.

(2) BUSINESS INTRODUCERS

Applications are invited from resident in and around Jaffna with good repute and influence to promote business in Hire Purchase Financing and Deposits.

Remuneration would be on a commission basis.

Applications giving full details accompanied by two testimonials should be forwarded within 10 days to:-

The Director
The Central Finance Company Limited,
No: 250, K K S. Road, JAFFNA.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இலக்கம்: ஈடு 1133

1. பெல்வின் ஞானப்பிரகாசம்
2. பெண் லயிற்றலா ஞானப்பிரகாசம்
தேவாலயவீதி-யாழ்ப்பாணம்

—வழக்காளிகள்

எதிராக

1. மனவல் கிறிகறி,
85/6, மவுன்காமல் வீதி, யாழ்ப்பாணம்.

—எதிராளி

ஈடு 1133ம் இலக்க வழக்கில் எனக்குக் கொடுக்கப்பட்ட கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1982ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15ம் திகதி முற்பகல் 10-30 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 4400/- இன்னும் ரூபாய் 4000/-க்கு 21-3-79 துவக்கம் 15-10-80 வரையும் வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும், அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 545-35சதம். இதில் ரூபாய் 2300/- கழிக்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை ''குடியிருப்பு வளவு'' 112/9 குளிகள் வீடும் மற்றும் அதைச்சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கும், வடக்கும் ஒழுங்கைகள். மேற்கு மனவல் அந்தோனிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு அந்தோனி மனவல் பெண் சிசிலியாவின் ஆதனம். இதடங்கலும்.

ப. நா. தருமலிங்கம்,
யாழ். மாவட்ட நீதிமன்ற கொம்மிசனரும்
ஏலவிற்பனையாளரும்.

126, வாசிகசாலை ஒழுங்கை,
3ம் கட்டை, கல்வியன்காடு,
யாழ்ப்பாணம் 16-10-82. 4862

# பிரிட்டனில் விகிதாசார தேர்தல் முறைவேண்டும்!

## சோஷலிஸ ஜனநாயகக்கட்சி கோரிக்கை

லண்டன், அக். 17

பிரிட்டனில் விகிதாசாரத் தேர்தல் முறை கொண்டு வரப்பட வேண்டுமென்று அந்நாட்டின்சோஷலிசஜன நாயகக்கட்சி யோசனை தெரிவித்துள்ளது.

பதினெட்டு மாதங்களுக்கு முன்னரே பிரிட்டனில் ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சி விகிதா சாரப் பிரதிநிதித்துவ முறை கொண்டுவரப்பட்டாலே எல்லா கட்சிகளும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில்பிரதிநிதித்துவம் கிடைக்குமென்றும்கருத்துதெரிவித்துள்ளது இதன் மூலம் எல்லாகட்கிகளின்கருத்துக்களும் பாராளுமன்றத்தில் இடம் பெறுமென்றும் கூறியுள்ளது.

விகிதாசாரத்தேர்தல் முறையின் மூலம் பிரிட்டனில் மாறி மாறி ஆட்சி நடத்திவரும் கன்சர்வேர்ட்டிவ் தொழிற்கட்சி ஆகியவற்றின்ஆட்கிக்கும் முற்றுப்புள்ளிவைக்க முடியுமென்றும் சோஷலிசஜனநாயக கட்சியின் தலைவரொருவர்தெரிவித்தார். (வெ)

## ஜப்பானின் ஆளும் கட்சி தலைமைப்பதவியில் இழுபறி!

டோக்கியோ. அக். 17

ஜப்பானில் ஆளும் லிபரல் ஜனநாயக கட்சியின் தலைமைப் பதவி தொடர்பாக இழுபறி நிலவி வருகிறது.

இப்பதவிக்கு ஜப்பானின் நான்கு அமைச்சர்கள் போட்டியிடுகின்றனர். வெளிநாட்டு கைத்தொழில் அமைச்சரும், பொருளாதார அமைச்சரும் இவர்களில் முக்கியமானவர்களாவர்.

புதிய தலைவர் பற்றி உடன்படிக்கையேதும் ஏற்படாத பட்சத்தில் தலைவர் பதவிக்கு தேர்தல் நடத்தப்படுமென்று கட்சியின் சிரேஷ்ட தலைவரொருவர் தெரிவித்தார். கட்சியின் தலைவராகத்தெரிவு செய்யப்படுபவரே ஜப்பானின் புதிய பிரதம மந்திரியாக நியமிக்கப்படுவார்.

ஜப்பானிய பிரதம மந்திரி திரு சுசுக்கி அண்மையில்ராஜினாமாச்செய்ததைத் தொடர்ந்தே இவ் இழுபறி ஏற்பட்டுள்ளது. [வெ]

## காவிரிநீர்ப்பங்கீட்டுப் பிரச்னை: மத்திய அரசு உதவவேண்டும்

### எம். ஜி. ஆர். கோரிக்கை

சென்னை, அக். 17

காவிரிநீர்ப்பங்கீட்டுப்பிரச்னைக்குத்தீர்வுகாண தமிழ்நாடு அரசுக்கு மத்திய அரசு உதவ வேண்டுமென்று முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இப்பிரச்னையில் மத்திய அரசு தலையிட்டு கர்நாடக அரசிடமிருந்து தண்ணீரைப் பெற்று தமிழ்நாட்டிற்குத் தரவேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

நாளை புதுடில்லி சென்றகாவிரி நீர்ப்பிரச்னை தொடர்பாகவும் மற்றும் பல்வேறு பிரச்னைகள் பற்றியும் பிரதம மந்திரி இந்திராகாந்தியைச்சந்தித்து கலந்துரையாடப் போவதாகவும் அவர்தெரிவித்தார். (வெ)

## புதுடில்லியில் நடக்கும் அணிசேரா உச்சி மாநாடு

புதுடில்லி, அக் 17

கூட்டுச்சேரா இயக்கத்தின் 7-வது உச்சிமகாநாடு அடுத்த ஆண்டில் ஆரம்பத்தில் இந்தியாவில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

எதிர்வரும் உச்சிமகாநாடு தொடர்பாக கூட்டுச்சேரா இயக்கத்தின் பிரச்னைகள் குறித்தும் கூட்டுச்சேராக் கொள்கையின் பாத்திரம், மற்றும் இதர அம்சங்கள் குறித்தும் உலக பத்திரிகைகள் அக்கறை காட்டி வருகின்றன. இந்த இயக்சத்தின் மதிப்பு அதிகரித்து வருவது குறித்தும் உலக நிகழ்வுகளில் அது பதித்துவரும் செல்வாக்கு குறித்தும் பத்திரிகைகள் சுட்டிக்காட்டி வருகின்றன,

யுத்தத்தைத் தடுப்பது சமாதானத்தைப் பாதுகாப்பதும் வலுப்படுத்துவதும் ஆயுதப் பரிகரணத்தைக் காண்பது மக்களது பூரணமான மெய்யான சுதந்திரத்தை உத்தரவாதம் செய்வது ஒரு புதிய நியாயமான சர்வதேச பொருளாதார உறவுகளை ஏற்படுத்துவது போன்ற தனது உறுதிப்பாடுகளையும் பிரதான இலட்சியங்களையும் கூட்டுச்சேரா இயக்கம் பின்பற்றி வருகிறது.

கூட்டுச்சேரா இயக்கத்தை அச்சுறுத்தும் பெரும் அபாயம் குறித்தும் கூட்டுச்சேரா நாடுகளின் பத்திரிகைகள் பல்வேறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. குறிப்பாக நேட்டோ வார்சா ஆகிய இரு இராணுவ அரசியல் கூட்டணிகளை இவை குறிப்பிடுகின்றன.

வளர்முக நாடுகள் நேட்டோவுடன் கொண்டுள்ள உறவுகளால் ஏற்படும் அபாயம், அச்சுறுத்தல் போன்று வார்சா ஒப்பந்த நாடுகளிடமிருந்து ஏற்படுவதில்லை. நேட்டோ கூட்டுச்சேரா நாடுகளுடன் ராணுவ உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதிலேயே நாட்டம் காட்டுகின்றன என்றும் இந்தியப் பத்திரிகைகள் சுட்டிக்கட்டியுள்ளது,

## இந்திரா அரசுக்கு மற்றுமொரு நெருக்கடி

புதுடில்லி, அக். 17

பஞ்சாப் மாநிலத்தில் அரசியல், மத கோரிக்கைகளைமுன் வைத்து சீக்கியர்கள் நடத்தி வரும் கிளர்ச்சியினுல் பிரதமர் இந்திரகாந்தியின் அரசுக்கு இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். [வெ]

## தீவிபத்து ஒருவர் பலி

புதுடில்லி. அக். 17

பம்பாயில் இடம்பெற்ற தீவிபத்தொன்றின்போது ஒருவர் பலியானதாகவும் 12 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. [வெ]

## அமெரிக்க நிதி உதவி நிறுத்தம்

வாஷிங்டன். அக். 17

சர்வதேச அணுசக்தி பிரிவிலிருந்து இஸ்ரேல் நீக்கப்பட்டதையடுத்து அப்பிரிவுக்கு அமெரிக்கா அளித்துவந்த நிதி உதவியை நிறுத்தியுள்ளது. (வெ)

## "போராட்டங்களை ஒதுக்கி இந்தியாவை முன்னேற்றுக"

### நாட்டு மக்களுக்கு இந்திரா அறைகூவல்

புதுடில்லி, அக். 17

''மக்கள் வேறுபாடுகளை மறந்து போராட்டங்களை ஒதுக்கி நாட்டின் முன்னேற்றம் கருதி உழைத்து வலிமை மிக்க இந்தியாவை உருவாக்க வேண்டும்''

இவ்வாறு இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி ஜான்ஸி கோட்டையில் நடைபெற்ற ராணி ஜான்ஸி நினைவு விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது?

''சில தீயசக்திகள் வகுப்பு வாதத்தைத் தூண்டி நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்க முயலுகின்றன. இவர்களை அடக்க விட்டால் நிலைமை அபாயகரமானதாத விருக்கும் வெளிநாடுகளின் உதவியுடன் இத்தீயசக்திகள் இயங்குகின்றனவா என்று அஞ்ச வேண்டியுள்ளது.

''மாநிலங்களில் ஏற்படுகின்ற கலவரங்களுக்கு பேச்சுவார்த்தை மூலம் அமைதியான முறையில் தீர்வுகாண வேண்டும் என்றார். [வெ]

## இலங்கை - சீன வர்த்தக உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கையும் சீனுவும் புதிய இருதரப்பு வர்த்தக உடன்படிக்கை யொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் இருநாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் 60 கோடி ரூபாவால் அதிகரிக்கவுள்ளது.

றப்பர் - அரிசி பண்டமாற்று முறை நீக்கப்பட்டு, பல்வேறு பொருட்களும் பணம் செலுத்திப் பெறப்படும். அடுத்த ஆண்டுமுதல் இவ்வுடன்படிக்கை நடைமுறைக்குவருகிறது. (வெ)

## சர்வதேச மருத்துவ நிறுவனங்களின் மோசடி!

ஜெனீவா, அக் 17

சர்வதேச மருந்துக் கம்பனிகளின் தவறுன நடவடிக்கைகள் பல அம்பலத்துக்கு வந்துள்ளன.

பிலிப்பைன்ஸ். கென்யா, இந்தோனேஷியா போன்ற நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட சில மருந்துகள் அங்கு மக்களிடையே ஏற்படுத்திய பாதிப்புக்களை இத்தவறுன நடவடிக்கைகளுக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச மருத்துவ நிபுணர்களில் ஒருவரான பேராசிரியர் போரிஸ்லியுபிமோவ் மேற்குலக மருந்து நிறுவனங்கள், மூன்ரும் உலக நாடுகளுக்கு விற்பனை செய்யும் மருந்துகள் தரமற்றவை என்ற தெரிவித்துள்ளார்

''சர்வதேச மருத்துவ நிறுவனங்களின் இக்கொலைகார நடவடிக்கைகள்' குறித்த பத்திரிகைகளில் வெளியானது இதுதான் முதல் தடவையல்ல. பெரும் லாப மீட்டுவதில் சர்வதேச எண்ணெய்க் கம்பனிகளுக்கு முதலிடம் என்ருல், அடுத்த இடம் இந்த சர்வதேச மருந்துக் கம்பனிகளுக்குத்தான்'' என்று பிரிட்டிஷ் பத்திரிகையான 'கார்டியன்' எழுதுகிறது.

சர்வதேச மருந்துக்கம்பனிகள் வளர்முக நாடுகளுக்கு உதவியளிக்க விரும்புவதில்லை. தமது மருந்துப் பொருட்களை விற்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றன. மேற்குலகில் தடை செய்யப்பட்ட மருந்துகள் யாவற்றையும், காலாவதியாகிப்போன மருந்துகளையும் அவை வளர்முக நாடுகளுக்கு அனுப்பிவிடுகின்றன,

அமெரிக்கா ஏற்றுமதிக்குப் பயன்படுத்திய 2000 மருந்து வகைகளை அமெரிக்க உணவு மருத்துவ நிர்வாகம் பரிசீலனை செய்தபோது அவற்றில் 60 சத வீதமானவை பயன்தராதவை என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

## ஒன்றரைக்கோடி பேருக்கு அமெரிக்காவில் வேலைஇல்லை

வாஷிங்டன், அக் 17

அமெரிக்காவில் 1981—1982-ம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக, யுத்த பிற்காலப் பகுதியிலேயே அதி மோசமானது என்று கூறப்படுமளவுக்கு நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம் ஏற்பட்டுள்ளது என்பதை ''யு எஸ். நியூஸ் அன்ட் வேர்ல்ட் ரிப்போர்ட்'' எனும் அமெரிக்க சஞ்சிகையில் வெளியாகியுள்ள புள்ளிவிபரம் காட்டுகிறது.

இந்த நெருக்கடி தொடர்ந்து ஆழமடையும் என்றும், இதனுல் வேலையில்லாதோர் தொகை மேலும் அதிகரிக்கும் என்றும் பொருளாதார நிபுணர்கள் கூறுகிருர்கள்.

ஒன்றரைக் கோடிப் பேர் இன்று அமெரிக்காவில் வேலையில்லாதோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இது 9·8 சத வீதமாகும். அமெரிக்காவின் இப்போதைய பொருளாதார நெருக்கடிக்குப் பல காரணங்கள் உள்ளன என்பதை ஜனுதிபதி றீகன் ஒத்துக்கொண்டுள்ளார். இது 1930 ஆண்டுகளில் ஏற்பட்டதைக் காட்டிலும் மோசமானது என்றும் கூறப்படுகிறது.

வாஷிங்டனது கணிப்பின்படி இன்று அமெரிக்காவில் 3 கோடி 20 லட்சம் மக்கள் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட வறுமை மட்டத்தின் கீழ் வாழ்கிருர்கள். மற்றொரு 3 கோடி மக்கள் இந்த மட்டத்தின் அருகே வாழ்கிருர்கள்.

ஒவ்வொரு மூன்ருவது அமெரிக்கருக்கும் அத்தியாவசியத் தேவைகள் கிடைப்பதில்லை என்பதை பொருளாதார சாத்தியப்பாடுகள் குறித்த தேசியக்கவுன்சிலின் அறிக்கை தெரிவித்துள்ளது. இந்த அறிக்கை அமெரிக்காவில் வெளியாகியுள்ளது.

1976ல் 109,00 கோடி டாலர்களாகவிருந்த அமெரிக்க ராணுவச் செலவு 1982ல் 225,00 கோடி டாலர்களாக அதிகரித்துள்ளது. 1985ல் 340,00 கோடி டாலர்கள் இராணுவத்துறைக்குச் செலவிடத்திட்டமிட்டுள்ளது. இராணுவச்செலவுகளே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

## சீன ஏவுகணை

பீகிங், அக். 17

சீன ஏவுகணையொன்றை நேற்று விண்வெளிக்கு வெற்றிசரமாகச் செலுத்தியுள்ளது, இப்பணியில் ஈடுபட்ட விஞ்ஞானிகளுக்கு சீனத்தலைவர்கள் வாழ்த்துத்தெரிவித்தனர். (வெ)

## வெள்ளப்பெருக்கு 60 பேர் பலி!

மனிலா, அக், 17

பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கினுல் 60 பேர் பலியானதாகவும், 20 பேரைக் காணவில்லையென்றும் அறிவிக்கப்பட்டது.

இங்கு மணிக்கு 180 மைல் வேகத்தில் புயல் காற்று வீசியதாகவும் கூறப்பட்டது.

...... (வெ)

## கிரிக்கெட்: 3வது டெஸ்ட் அவுஸ்: 314 பாக்: 4--318.

இஸ்லாமாபாத், அக், 17

லாகூரில் பாகிஸ்தானுக்கும் அவுஸ்திரேலியா விற்குமிடையில் நடைபெற்றுவரும் 3வது கிரிக்கெட்டெஸ்ட்டில் அவுஸ்திரேலியா முதலாவது இன்னிங்கிஸில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றது

பாகிஸ்தான் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கட்டுக்களை இழந்து 318 ஓட்டங்களைப் பெற்றநிலையில் தொடர்ந்து ஆடிக்கொண்டிருக்கிறது. [வெ]

## மணிவாக்கு

அடிமையாக இறந்து மோட்சம் அடைவதை விட அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடைவதே மோட்சமாகக் கருதுவதுதான் உயர்ந்த கொள்கை அது மட்டுமல்ல அதற்கு இணை வேறெதுவுமில்லை.

— இங்கர்சால்.

# நமது நோக்கு

## கொடுப்பது காதை; வாயை அல்ல

வாக்களிப்புத் தொடங்க 48 மணித்தியாலங்களுக்கு முன் எவ்வித தேர்தல் பிரசாரமும் முடிவடையவேண்டுமென்பது சட்டம்.

மிக நல்ல சட்டம்: இன்றைய தேர்தல் பிரசாரத்தில் மண்டைக் கனம் ஏற்படுவதோடு மண்டைகளும் (பன்மை) உடைபடலாம்; அதை நாம் ஒருபோதும் விரும்பவில்லை. எவரும் விரும்பமாட்டார். எனவே சட்டத்துக்கு மதிப்பளிக்க ஷேக்ஸ்பியரின் புத்திமதியைத் தலையங்கமாகத் தெரிந்தெடுத்தோம்.

வாழ்வில் எக்காலத்துக்கும் பொருத்தமான இம் மணிவாக்கு, இன்று நம் காணும் இலங்கையில் மிக அவசியமானது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் முந்தநாள் வானொலிப் பேச்சைக் கேட்ட மக்கள் இந்த நாட்டில் நிலவும் அமைதிபற்றி மகிழ்ச்சியடையவேண்டும்; அதே சமயம் அமைதியின்மைக் குவன் செயல்களுக்குப் பலியான பலர், பலயிரக்கணக்கானோர் ஆச்சரியமும் ஏமாற்றமும் அடைவது இயல்பு.

உலகில் பலநாடுகளில் பலவித குழப்பங்கள் நடைபெறுகின்றன: நாடுகளுக்கிடையே பிணக்கும் யுத்தமும் நீண்டகாலமாக தொடர்கின்றன. இவற்றை ஒப்பிட்டால் நாம் ஆறுதல் அடைவது வேறு. தனிப்பட்டளவில் எங்கள் நாட்டின் சொந்த நிலை திருப்தியற்றிருப்பது வேறு.

ஆட்சியிலிருந்த எந்த அரசும் கணக்கெடுப்பில் வரவு செலவு என்ற இரு பகுதிகளிலும் புள்ளிகள் பெற்றிருப்பது நாம்கண்ட அனுபவம்; பொதுத் தேர்தல், அல்லது இன்றைய ஜனாதிபதி தேர்தல் நிழும் கட்டத்தில் இப்புள்ளிகளுக்கு மதிப்பீடு கொடுப்பதில் கருத்துமோதல்கள் ஏற்படுவது எமது கவனத்துக்குரியது.

இவற்றிற்கெல்லாம் இத்தேர்தலைப் பொறுத்தளவில் இன்று முற்றுப்புள்ளி வைப்போம்.

''எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு''

சிநேகராயினும் பகைவராயினும், சான்றோராயினும், சாதாரண மக்களாயினும் யார் சொல்வதிலும் உள்ள உண்மையை உணரும் ஆற்றல் தருவது அறிவு.

இதற்கு மிக உகந்த தினங்கள் இன்றும் நாளையுமே! காதால் கேளுங்கள்; கருத்துப்பரிமாறலைத் தற்காலிகமாகத் தடைசெய்யுங்கள்.

யாழ்ப்பாணத்து மக்களுக்கு யானை (ஐ. தே. கட்சி சின்னமல்ல) வருமுன்னர் மணியோசை போன்றது மூன்று தினங்களுக்குமுன் எரிந்த யாழ்ப்பாணம் பெரிய கடைப் பகுதியின் சில கடைகள்.

உண்மை எதுவானாலும், யாழ் பாணம் பகைவரின் தீயைக்கண்டு மனமுடைந்த நகரம்.

யாழ்ப்பாண மக்கள்—பரவலாக தமிழ் மக்கள் பல தடவைகளில் இனக்கலவரத்துக்கும் அரசாங்க படைகளுக்கும் பலியானவர். வன் செயல் வதர்திகளை வீண் வார்த்தைகளென்று குப்பைத் தொட்டிக்குள் தூக்கி எறியும் பாக்கியமற்றவர்கள்.

இவ்விருநாட்களில் சுயசிந்தனையில் நேரம் செலவிடுதல் மிகவும் விரும்பத்தக்கது.

தேர்தல் பற்றி தொகுப்புரை ஏதும் உண்டா?

இவ்வாறு கேட்கும் வாசகருக்கு நாமென்ன பதில் கூறலாம்?

வினாவை எழுப்பி விடைவால் எமது ஆற்றுமையைப் பறைசாற்றுவது அழகல்ல.

இருப்பினும் அரசியல் விடயங்களில் பணிவு அகங்காரத்திலும் பார்க்க மிகச் சிறந்தது.

எங்கு பார்த்தாலும் — பிரசாரக்கூட்டங்கள், பேச்சுகள், கருத்தரங்கள் — அகங்காரத்தின் படமே தெரிகிறது தான் பிடித்த முயலின் படம் – அதற்கு மூன்று கால்கள்!

நான்காவது காலை நாம் கண்டதுண்டு.

வருகிற புதன்கிழமை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் நாட்டின் சரித்திரத்தில் முக்கியமானது. நாமெப்பகுதியில் வாழ்ந்தாலும் அது முக்கியமானது. இந்த நாட்டுக்கு இன்று ஆட்சியில் மாற்றம் வேண்டுமா? அல்லது இல்லையா? இதுவே கேள்வி.

பலர்கண்ட முயலின் அவர்கள் காணாத நான் காம்சால் இது.

மிகத்தெளிவான கேள்வி ஜனாதிபதி அவர்களே பகிரங்கமாகக்கேட்கும்கேள்வி.

விடை: மாற்றம் வேண்டுமென்றால் இன்றைய ஜனாதிபதிக்கு எதிராக வாக்களிப்பது; வேண்டாமென்றால் இன்றைய ஜனாதிபதிக்கு சார்பாகவாக்களிப்பது

விடைகாண நாம் எவ்வாறு உதவலாம்? நுட்பமான விடயங்களை பொதுமக்கள் கேள்வியாலேதான் அடையமுடியும். சோதிடத்தால் அல்ல

கல்வி கற்றவர்கள் கட்சிக்காரர்களின் அகங்காரத்துக்குப் பலியாகாமல், வினாவிடைமுறையில் கேட்டறிந்ததைச் சிந்திக்க முடிவுதானகவே தென்படும்.

கடந்த ஐந்து வருடங்களில் நிகழ்ந்தமாற்றங்கள் நிறைவேற்று அதிகாரம் பெற்ற ஜனாதிபதிஆட்சிக்கு சாதகமா? அல்லது பாதகமா?

இவ்வித ஆட்சி தொடரின்—இன்றைய ஆட்சியின் அனுபவத்துக்கமைய—எதிர்க்கட்சி கொண்ட ஜனநாயக ஆட்சிக்கு வாழ்வா? அல்லது சாவா?

பொருளாதார ரீதியில், இன்றைய தாராள பொருளாதாரக் கொள்கைதொடர்வது நாட்டுக்கு நல்லதா? அல்லது இல்லையா?

இன்றைய வெளிநாட்டுக் கொள்கை நாட்டின் சுதந்திர வாழ்வுக்கு சாதகமா? அல்லது பாதகமா?

இறுதியாக நாம் தமிழர்—இந்தநாட்டு மக்களின் ஒரு முக்கிய பகுதியினர் என்ற மட்டில், இந்நாட்டில் எமக்குரிய இடம் கிடைப்பதானால், இந்த ஆட்சி தொடர வேண்டுமா? அல்லது இல்லையா?

இவ்வைந்து பரந்த கேள்விகளுக்கு 'ஆம்' 'இல்லை' கண்டுபிடிக்கமுடியுமானால், வாக்காளர்களாகிய எமக்கு நீதிமன்றத்தின் ஜூரர்கள் போல் பெரும்பான்மை விடைகளால்– ஆட்சி மாற்றம் வேண்டுமா இல்லையா வென்பது தெளிவடையும்.

அவ்விடைக்கு ஆவன செய்வது வாக்காளர்களின் தலையாய கடன்.

★ இன்று எண்பது வயது பூர்த்திபெறும்

முன்னாள் ஸ்கந்தா அதிபர்

# நின்புகழ் விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்!



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு இன்றுடன் எண்பதுவயது நிரம்பப்பெறுகிறது!

நம்பமுடியவில்லை! இலங்கையில் அன்றும் அவர் ஒரு தேசியவாதி, இன்றும் அவர் ஒரு தேசியவாதி தேசியக் கண்ணோட்டம் மாறுதபழம்பெரும் தேசபக்தர் அவர். எண்பது வயது நிரம்பியும் பார்ப்பவர் கண்ணுக்கு அவர் இளஞ்சிங்கம் ஆகவே தோன்றுகின்றார்.

தூய வெள்ளுடையணிந்து நெற்றியில் திருநீறு ஒளிவீச அவர் நிமிர்ந்து நடந்து செல்லும் காட்சி மனத்தைவிட்டு நீங்காது! அண்மையில் அவர் மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவிலைப் பொதுமக்களின் உடைமையாக்கவேண்டுமென்று நண்பர்களுடன் சேர்ந்து முறையிட்டு நீதிமன்றில் வெற்றியுங்கண்டார். அவர் அஞ்சா நெஞ்சம்படைத்தவர். சிறந்த பேச்சாளன். எவருக்கும்நல்லவர், எடுத்த காரியம்

இளம்பருவம் முதல் கல்வி கற்பதிலும் விளையாட்டுத் துறையிலும்பேச்சுக்கலையிலும் எழுத்துத்துறையிலும் ஆர்வங் கொண்டவர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும், யாழ். இந்துக்கல்லூரியிலும் கல்விகற்றவர். யாழ். இந்துக்கல்லூரியின் அன்றைய அதிபர் அறிஞர் நெவின்சு செல்வத்துரை அவர்கள் அவருடைய அன்புக்கும் மதிப்புக்கும் உரியமாணவனாக, அவர். திருவாயினாலேயே ஒறேற்றர்' என்ற பட்டமும் சூட்டப்பெற்றவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள். ஆங்கிலப்பேச்சுவன்மை திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு இயல்பிலேயே அமைந்துவிட்டது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மேற்படிப்புப்படிக்கும்போது பேரறிஞர் ஹண்டி பேரின்பநாயகம் அவர்களின் இணைபிரியா நண்பனுனர் இவர்.

இருவரும் கருத்துவேறுபாடற்ற பழம்பெரும் நண்பர்கள். 'கபிலபரணம்' போல

## வித்துவான் சி. ஆறுமுகம்

முடிப்பதில் வல்லவர். ஈடும் இணையும் அற்ற அதிபர் தலைசிறந்த ஆசிரியர் சிறந்ததேசியவாதி இப்படியே அடுக்கியடுக்கி எழுதினாலும் அவர்புகழ் அடங்காது சங்கப்புலவன் ஒருவன் ஓர் அரசனை வியந்து கூறியஓர் அடிமட்டும்நினைவுக்கு வருகிறது ',அரசே நின்புகழ் விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும் இத்தகையவர் பெருஞ்சொற் கொண்டல் (Orator) சி. சுப்பிரமணியம் அவர்கள்.

'வேத நூல் பிராயம் நூறு' என்பது வைணவப் பெரியார் ஒருவர் வாக்கு, எமதுமதிப்புக்கும் அன்புக்கும் உரிய அதிபர் அவர்கள் நூறாண்டு வாழ வேண்டும் என முதலில்வாழ்த்துவோம். 'அதிபர்' என்றே அவரை இக்கட்டுரையில்அழைக்கவிரும்புகின்றேன். அவர் பிறவியிலே ஓர்அதிபர். அவர் முன்னோர்கள் ஸ்கந்தவரோதய கல்லூரியின் அதிபர்களாக அமர்ந்து பணிபுரிந்தவர்கள். 'நல்லாசிரியன்' என்றும் 'நல்ல அதிபர்' என்றும் பெயர் எடுப்பது எளிதான காரியம் அன்று ஒரு கல்லூரியை கட்டிவளர்ப்பது அருமையிலும் அருமையான காரியம்.

ஏறக்குறைய அறுபது ஆண்டுகளின்முன் சாதி வேறுபாட்டினை ஒழிக்கவும், சமாசனம், சமபோசனம் வழங்கவும்'' யாழ்ப்பாணத்தில் முன்னின்றுழைத்த 'வாலிபமகாநாட்டி'ன் அமைப்பாளர்களில் இருவரும் முக்கியமானவர்கள் தாழ்ந்து நின்றமக்களுக்கு முதன் முதற் கைகொடுத்தவர்அதிபர்சுப்பிரமணியம் அவர்கள். வடமாகாணத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியே தாழ்த்தப்பட்ட மணவர்களைக் கல்வி பயில முதன்முதல் சேர்த்துக்கொண்ட கல்லூரி. மாணவர் விடுதியிலும்சமவாழ்வு அளித்த முதற்கல்லூரியும் இதுவே.

அரியகாரியத்தை துணிவுடன் செய்து நாட்டுக்கு முன்னோடியாக விளங்கினார் இவர். இது ஈழத்தமிழர் வரலாற்றில் இடம் பெறவேண்டிய முக்கிய நிகழ்ச்சி.

1944-ம் ஆண்டில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிர்ஷ்டம் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியராக விளங்கிய திரு. சுப்பிரமணியம் பதவி ஏற்க முன்வந்தார். ஏறக்குறைய 250 மாணவர்களையும் 13 ஆசிரியர்களையும் தன்னகத்தடங்கிய 'ஸ்கந்தா'வுக்கு அதிபர் ஆனார் திரு. சுப்பிரமணியம் அவர்கள். 'சரியானதைச் செய்க' என்றார் தாபகர் கந்தையா உபாத்தியாயர். பல ஆயிரக்கணக்கில் பணத்தையும் தேவையான நிலத்தையும் வழங்கினார் முகாமையாளர் டாக்டர் சுப்பிரமணியம். சனி, ஞாயிறு நாட்களிலும் விடுமுறை வேளைகளிலும் விசேட இலவச வகுப்புகள் நடத்தினர் அதிபரும் ஆசிரியரும் ஸ்கந்தா வளர்ந்தது! வளர்ந்தது! வளர்ந்ததுவே!

கந்தரோடையைச் சூழ்ந்துள்ள கிராம மக்கள் விழித்தனர், மகிழ்ந்தனர். தமது கல்லூரியென்றே எண்ணினர். மாணவர்தொகை பெருகியது. ஆசிரியர் தெரிவுகளும் நிகழ்ந்தன. தகுதி வாய்ந்த முதற்றரமான ஆசிரியர்கள் இலங்கையிலும், தமிழகத்திலும்இருந்து தெரிந்தெடுக்கப்பெற்றனர். கல்லூரியைக் கட்டி வளர்ப்பதில் அதிபர் வெற்றிகண்டார். 1947-ம் ஆண்டில் முதல்தரமான கல்லூரி ஆயிற்று. 1957-ல் அதிமுதற் பிரிவுக் கல்லூரியாக அரசினரால் தரம் உயர்த்தப்பெற்றது. புகுமுகத் தேர்விலும் கணிதம், விஞ்ஞானம், கலைப் பாடங்களில் யாழ். நகரில் முதலிடம் பெற்றது ஸ்கந்தா. மாணவர் விடுதியும் வளர்ந்தது. 250 மாணவர் வரை விடுதியில் இடம்பெற்றனர். விளையாட்டு மைதானமும் விசாலமடைந்தது. ஸ்கந்தா தன் வாழ்வில் முதன் முதலாக 1958-ல் யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்ட வெற்றி வீரர் என்ற இடத்தையும் பிடித்தது. அதிபர் புகழும் அகில இலங்கையிலும் பரவிற்று! அரசினர் கல்லூரிகளைப் பொறுப்பு ஏற்க முன் ஸ்கந்தாவில் இரண்டாயிரத்து இருநூற்றைம்பது மாணவர்கள் ஆறுந்தரம் முதல் பன்னிரண்டாம்தரம் வரை பயின்ற

[8ம் பக்கம் பார்க்க]

## நவராத்திரியை நோற்பார் தோற்கார் எதிலுமே!

### நேரிசை வெண்பா

முச்சகத் திகள்சேரும் முன்னுநவ ராத்திரியாம்
உச்ச விரதமதை உண்மையாய் – இச்சகத்தில்
நோற்பார் எனிலவர்கள் நோவாது வாழ்வுறுவர்;
தோற்கார் எதிலுமே சொல்.

### விருத்தம்

வீரமும் திருவும் நல்ல
விளங்குகல் வியுமே பெற்றுத்
தீரராய்ச் செல்வ ராகத்
திகழுயர் அறிஞ ராகப்
பாரகந் தனிலே துர்க்கை,
பகர் லக்ஷ்மி, வாணி பாதம்
சீரதாய்ச் சேவிப் போமே!
திருவருள் சேமிப் போமே!

- வெண்பாமணி முருகசூரியன்

இலங்கை -- இந்திய

# கலைஞர் பரிமாற்றத்துக்கான திட்டம் தேவை

## பிரபல பாடகர் 'பாலா' பேட்டி

இலங்கை – இந்திய கூட்டுத் திரைபடங்களைத் தயாரிப்பதுடன் மட்டும் நின்று விடாது இலங்கையிலுள்ள நடிகர்கள், பாடகர்கள், டைரடர்கள், இசையமைப்பாளர்கள் போன்ற கலைஞர்கள் இந்தியா வந்து இந்திய திரைபடங்களில் நடித்து இசையமைத்து பாடி இயச்குநராகப் பணிபுரிய வேண்டும். அதேவேளையில் இந்திய கலைஞர்களும் இலங்கையில் மேற்படி துறைகளில் ஈடுபட வேண்டும் இதற்கு அமைவாக இரு நாட்டுக்கலைஞர்களிடையேயும் பரிமாற்றத்திட்டம் ஒன்று வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் இரு நாடுகளிலும் சினிமாத்துறை வளர்ச்சி அடையும் என்பதில் சந்தேகமில்லை.

இக்கருத்தை வலியுறுத்தியவர் வேறு யாருமல்ல தென்னிந்திய பிரபல பின்னணிப் பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியமே!

தமது குரலினால் தென் இந்தியாவில் மட்டுமல்ல வடஇந்தியாவிலும் கொடிகட்டிப் பறக்கும் பாலசுப்பிரமணியம் அண்மையில் தமது தங்கை செல்வி சைலஜாவுடன் இலங்கை வந்திருந்தார்.

இந்திய – இலங்கை பிரபல நடிகர்கள் நடிக்கும் சாந்தி பிலிம்ஸ் நிறுவனத்தினர் தயாரித்துவரும் 'இளைய நிலா' படத்திற்கான பாடல்களின் ஒலிப்பதிவுக்காக இங்குவந்திருந்த அவர் கொழும்பு கிறீன்லண்டஸ ஹோட்டலில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். சாந்தி பிலிம்ஸ் அதிபர் திரு எஸ். சண்முகம் இந்த பத்திரிகையாளர் மகாநாடடை ஏற்பாடு செய்திருந்தார்.

அலைகள் ஓய்வதில்லை புகழ் தியாகராஜன் தீபா ஸ்வப்னு ஆகிய தென்னிந்திய நட்சத்திரங்களும் இலங்கையின் முன்னணி நடிகர்களுள் ஒருவரான காமினி பொன்சேகாவும் முக்கிய பாத்திரங்களில் நடிக்கும் இம்படத்தின் பாடல்களை பாலசுப்பிரமணியமும் தங்கை சைலஜாவுமே பாடுகிறார்கள்.

சென்னை, பம்பாய் ஹைதராபாத் என்று பறந்துபறந்துஒரு மொழி, இருமொழிய பாடல்களை அல்ல தமிழ், தெலுங்கு கன்னடம், மலையாளம் ஹிந்தி உட்பட ஆறு மொழிகளில் பாடி வரும் பாலசுப்பிரமணியம் இலங்கை வந்து இலங்கைத் திரைப்படத்தில் பாடுவதில் தாம் பெருமைப்படுவதாகக் கூறுகிறார்.

### ஒரு விபத்து

மிகவும் எளிமையுடன் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெகு சரளமாக உரையாடிய அவர் தாம் சினிமாத்துறைக்கு வந்ததே ஒரு 'விபத்து' என்றுகூறுகிறார். அந்த விபத்து நிகழ்ந்திராவிடின் எங்கோ ஓரிடத்தில் பொறியியல் நிபுணராக ''எதற்குமே நேரம் கிடைப்பதில்லை'' என்ற பேச்சுக்கே இடமின்றி வாழ்ந்து கொண்டிருப்பேன் என்றும் சொன்னார்.

**இ. கந்தசாமி**

அவர் மேலும் கூறுகிறார் —

ஆந்திரா மாநிலத்திலுள்ள நெல்லூரில் பிறந்து வளர்ந்த நான் பொறியியல் துறையில பட்டம் பெறுதற்காகவே சென்னை வந்தேன். பொறியியல் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போது 1964ல் அங்கு நடைபெற்ற பாட்டு (தெலுங்கு பாட்டு) போட்டி ஒன்றில் நானே இயற்றி நானே பாடிய பாடல் ஒன்றுக்கு முதல்பரிசு கிடைத்தது. இதுவேநான்திரைப்படத் துறையில் நுழைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது.

### முதல்படமே வெளிவரவில்லை

66ம்ஆண்டுமுதல் தெலுங்கு கன்னடப் படங்களில் பின்னணி பாடி வந்த எனக்கு69ல் 'ஹோட்டல் ரம்பாய்' என்ற தமிழ் படத்தில் பாடுவதற்கு திரு. எம். எஸ். விஸ்வநாதன் வாய்ப்பளித்தார். நான்முதன் முதலில் தமிழில் பாடிய அந்தப்படமே வெளிவரவில்லை. அடுத்து 'சாந்தி நிலையம்' என்ற படத்தில் விஸ்வநாதனே வாய்ப்பளித்தார்.

முதல்படம் ஏமாற்றத்தைத் தந்தாலும் 2வது படம், அதாவது நான்பாடி முதன்முதலில் வெளிவந்த 'சாந்தி நிலையம்' படத்தில் வரும் ''இயற்கை எனும்...'' என்ற பாடல் அந்த ஆண்டின் சிறந்த பாடலுக்கான தமிழக அரசின்பரிசைத் தேடித்தந்தது இதை வாழ் நாளில் என்றுமே மறக்கமுடியாது.

### ஆயிரம் பாடல்களுக்கு மேல்

ஆறு மொழிகளிலும் இதுவரை ஏழாயிரம் பாடல்களுக்கு மேல் பாடியுள்ளேன் ஆனாலும் 'சங்கராபரணம்' படத்தில் வரும் பாடல்களைப் பாடிய போதுஎனக்குஏற்பட்ட புளகாங்கிதமும் உள்ளத்திருப்தியையும் வெறும் வார்த்தைகளால் கூறிவிடமுடியாது.

'சங்கராபரணம்' போன்று தெலுங்கில் இருபடங்கள் முன்னர் தயாரிக்கப்பட்டபோது அப்படங்களில் பாடும் வாய்ப்புக்கிட்டும் என்று எதிர்பார்த்தேன்; அது கிட்டவில்லை. அதனால் சற்று மனஞ் சஞ்சலப்பட்டிருந்தவேளை இந்தப் படத்தில் வாய்ப்புக்கிடைத்தது. எனது வாழ்க்கையில் கிடைத்த பெரும் பேருகவே இதை நான் கருதுகிறேன்.

இப்படத்தில் பாடுவதற்கு எனக்கு நீண்டநாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. அப்பயிற்சியினலேயே அதில் அவ்வளவு அற்புதமாகப் பாடமுடிந்தது.

இப்போது வெளிநாடுகளில் என்றாலும் சரி உள்நாட்டிலும் சரி எவர் சந்தித்தாலும் 'சங்கராபரணம்'' பற்றி புகழாதவர்கள், கேட்காதவர்கள் இல்லை என்றே கூறலாம்.

### முறையாக சங்கீதம் கற்கவில்லை

நான் என்றுமே முறையாகச் சங்கீதம் கற்றுக்கொண்டதில்லை. இப்படிச் சொன்னல் எவரும் நம்புவதில்லை. அதுவும் 'சங்கராபரணம்' படம் வெளிவந்த பின்னர் எவரும் எனது கூற்றை முற்று முழுதாக நம்புவதில்லை. ஆனல் விரைவில் முறைப்படி சங்கீதம் கற்று இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி சங்கீதக் கச்சேரிகளை நடத்தி எனது ரசிகர்களை மகிழ்விக்க வேண்டும் என்பதே எனது ஆசை. அது நிறைவேறும் என்றே நம்புகிறேன்.

### பிரசவவேதனை

ஒருபாடலை இயற்றி, இசையமைப்பது என்பது ஒன்றும் சாதாரண விஷயமல்ல பிரசவ வேதனை என்றே கூறலாம். இவ்வாறு பாடல் ஆசிரியரும் இசை இயக்குநரும் பிரசவ வேதனையுடன் பாடல்களைத் தயாரிக்க பாடகர்களாகிய நாம் இலகுவாக ஒலிப்பதிவு நேரத்தில் மட்டும் வந்துபாடிவிட்டு புகழையும் தேடிக் கொள்கிறோம். இவ்வாறு ஒரு கட்டத்தில் தமது மனதில் உள்ளதை வெளிப்படையாகக் கூறினர். பாலசுப்பிரம்ணியம்.

ஸ்ரீதரின் டைரக்ஷனில் உருவாகிவரும் ரஜனிகாந் நடிக்கும் தமிழ்ப்படம் ஒன்றுக்கு முதல் தடவையாக இசைஅமைத்து வருகிறேன். இதுவரை 6 தெலுங்குப் படங்களுக்கும் ஒரு கன்னடப் படத்திற்கும் இசை அமைத்துள்ளேன்.

### சிங்களப்படங்களில்....

வாய்ப்புக்கிடைத்தால் சிங்களப்படங்களில் பாடுவேன் பல்வேறு மொழிகளிலும் பாடுவதையே நான் பெரிதும் விரும்புகிறேன்.

திரைப்படங்களில் நடிக்க வேண்டும் என்ற நோக்கம் எதவும் எனக்குக்கிடையாது. ஆனல் நல்ல பாத்திரத்தில் நடிக்க வாய்ப்புக்கிட்டுமானல் நிச்சயம் நடிப்பேன்.

'இளைய நிலா' திரைப்படம் வெற்றிப்படமாக அமைய வேண்டும் என்பதே எனது அவா, அவ்வாறு அமையும் என்றும் நம்புகின்றேன் — அவரது வார்த்தைகளில் நம்பிக்கை ஒளி தெரிகறது.

ரூபவாகினியில்
திரைப்படங்களை தெளிவாக கண்டுகளிக்க
உத்தரவாதத்துடன்
சென்னை - ரூபவாகினி
ஏரியல் பொருத்திக்கொள்ளவும்
மற்றும்
உங்கள் வீட்டு மங்கள வைபவங்களை
வீடியோவில்
படம் பிடித்துக்கொள்ளவும்
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்
யாழ்ப்பாணம்.

## கவிதைக்கரசன் கண்ணதாசன்

கவிதைக்கரசன் கண்ணதாசன்! — அவன்
கவிதைக் கெல்லாம் நான்தாசன்! [கவிதைக்]

குருவாக உனை நினைத்தேன் கண்ணதாசா!
குறையினிலே விட்டதேன் கண்ணதாசா?
எருவாக நீயிருந்து என் பாடல் சிறக்க
ஏனிடையில் மறைந்தாய் என் பாடலிறக்க
உருவாக உனைக்காண உளம்மீது ஆசை!
உடைத்திட்டாயதனை இதுவா உன்னசை!?
கருவாக நானிருக்கக் கருணைமிகுதாய் நீயும்,
கடுகிஉயிர் போக்கவுடன் மடிந்தது சேயும்!
[கவிதைக்]

நாவல் சிறுகதைகள் நயமான கட்டுரைகள்,
நாவன்மை மிக்க நின் சொற்பொழிவுகள்,
காவல் இடவில்லையோ? காலனிடமுயிர் காக்க;
காத்திருந்தேன் நானும் நேரில் உனைக்காண!
பாவலனே பார் போற்றுங் கவி வேந்தே,
பாக்கியம் நான் செய்யவில்லை, மனம் வெந்தே,
கூவல் போட்டிங்கே அழுகின்றேன்!
கூற்றுவனைத் திட்டித்தினம் புரள்கின்றேன்!
[கவிதைக்]

ஆயிரங் கற்பனை அகத்தினில் கொண்டேன்!
அவையின்று பொய்யான நிலையினைக்
கண்டேன்!
கோயிலின் தீபம் அணைந்திடத் துடித்தேன்!
கோபுரக் கலசம் உடைந்திட வெடித்தேன்!
வெயிலவன் வெளிச்சம் மங்கிட நொந்தேன்!
வெள்ளி நிலாவினைக் காணது தவித்தேன்!
குயிலொன்று பாடமறந்திடக் கண்டேன்!
கூவா(து)தது மீளாத் துயிலென அறிந்தேன்!
[கவிதைக்]

இன்னொரு கண்ண தாசன் போற்கவி,
ஈண்டு காணுமோ, இந்தப் பெரும்புவி?
முன்னொரு கம்பன், இளங்கோ, பாரதி,
முறைவழி வந்த இவனொரு சாரதி!
தன்னொரு எழுதுந் திறன் கொண்டே,
தரணியிலுயர்ந்தான் இவன் நன்றே!
பின்னொரு காலம் இவன் புகழை,
பிறருக் கோதும் படைப்புக்களே!
[கவிதைக்]

- ''வட்டூர், ஜெ. கி. ஜெயசீலன்''

[ ★ கவிஞர் கண்ணதாசன் மறைந்து இன்று ஓராண்டாகிறது ]

## இளைஞர்களுக்கு கட்டுப்பாடு இன்றியமையாதது

(சுழிபுரம்)

''இளைஞர்கள் மத்தியில் கட்டுப்பாடு இன்று இன்றியமையாத ஒன்ருக இருக்கவேண்டும் இளமையில் கட்டுப்பாடான வாழ்வை அமைத்துக் கொண்டால் பிற்கால வாழ்வு நன்கு சிறப் படைவதுடன், நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழவாய்ப்பு ஏற்படும்''.

இவ்வாறு பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் திரு என். சிவஞான சுப்பிரமணியம் பண்ணாகம் அண்ணா கலைமன்றம் நடத்திய சிறுவர் தினவிழா விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். வழக்கம்பரை அம்மன் கோவில் வீதியில் அமைந்துள்ள மோகன் அரங்கில் மன்றத் தலைவர் செல்வன் வெ. அன்பழகன் தலைமையில் விழா நடைபெற்றது. சங்கானை மேற்கு கிராமோதய சபைத்தலைவர் திரு செ. வைத்தியலிங்கம், பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் திரு. வ. ஆறுமுகம், பண்ணாகம் மாதர் சங்கத்தலைவி திருமதி நவராணி சிவசுப்பிரமணியம் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்கள்.

## பாடசாலை விபரத்திரட்டு

(வவனியா)

பாடசாலை வருடாந்த விபரத்திரட்டினை வவனியா வட்டாரக் கல்வி அதிகாரிகள் திரட்டி வருகின்றனர்.

இதுபற்றிய விபரங்களை கோரும் விண்ணப்பப்படிவங்கள் இங்குள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்படிவங்களில் பாடசாலை பிள்ளைகளின் வரவு சராசரி, ஆசிரியர்களின் விபரங்கள் பாடசாலையின் தரம் இவை பற்றிய பல முக்கிய வினக்கள் கேட்கப்பட்டுள்ளன.

(வெ)

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். சௌக்கிய சேவை, கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் 25 வது வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்ற போது, பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ச. சீவரத்தினம், உப தலைவர் ச. சத்தியமூர்த்தி செயலாளர் சீ. செல்லத்துரை தனதிகாரி வை. சிவலிங்கம் உப தனதிகாரி ச. கணேஸ், நிர்வாக உறுப்பினர்களாக வை. வே. கந்தசாமி, க. ஞானப்பிரகாசம், இ. புஸ்பராசா சி. கந்தையா, க. கிருஷ்ணராசா, க. செல்வராசா, செல்வி, வ. தெய்வநாயகி.

[மா]

## ஹெக்டரை ஆதரிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு ஹெக்டர் கொப்பேகடுவவை ஆதரிக்குமாறு கோரி 1980 ஜூலை பொதுவேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வேலையிழந்தோர் சங்கம் தமிழ்மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வேலையிழந்தோர் சங்கத் தலைவர் திரு. எஸ் செபஸ்தியாம்பிள்ளை இதுசம்பந்தவாக விடுத்துள்ள அறிக்கையில்—

''1980 ஜூலை பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஒரே ஒரு காரணத்திற்காக பல்லாயிரக்கணக்கான அரசாங்க-கூட்டுத்தாபன ஊழியர்கள் வேலையிழந்து நாதியற்று நடுத்தெருவில் நிற்கிறார்கள். இவர்களை உங்கள் உடன்பிறவிகளாகக் கருதி அபலைகளின் துயரைத் துடைப்பதற்காகவும் எஞ்சியுள்ளோரின் குடும்பத்தை வறுமையின் கொடுமையிலிருந்து காப்பாற்றுவதற்காகவும் இறந்தவர்களின் ஆத்மசாந்திக்காகவும் திரு. கொப்பேகடுவவை ஆதரித்து வாக்களிக்குமாறு சகல வாக்காளப் பெருமக்கள் தொழிலாள வர்க்கத்தினர் விவசாயப் பெருமக்கள் யாவரையும் கேட்டுக் கொள்கின்றோம்'' என்று குறிப்பிட்டுள்ளார். (மா)

## சுதந்திரக் கட்சியை ஆதரிக்க சம்மேளனம் முடிவு

[யாழ்ப்பாணம்]

வடபகுதி விவசாயிகள் சிறிலங்காசுதந்திரக்கட்சியின் ஆட்சிக்காலத்தில்அடைந்த நன்மைகளையும், இப்பொழுதிருக்கும் ஐக்கியதேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் பட்ட கஷ்டங்களையும் உணர்ந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஆதரிக்கவேண்டும் என்று கிளிநொச்சி விவசாயிகள் சம்மேளன செயலாளர் திரு. பொ. பத்மநாதன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்மேளனத்தின் செயற்குழுக் கூட்டம் அதன் தலைவர் திரு. கே. சௌந்தரநாதன் தலைமையில் நேற்று நடைபெற்ற பின்னர், செயலாளர் இந்த அறிக்கையை விடுத்தார்.

''தமிழ் மக்கள் இத்தேர்தலைப் பகிஷ்கரிப்பதாலோ அல்லது வெற்றிபெற முடியாத ஒருவருக்கு வாக்களிப்பதாலோ இந்த ஆட்சியாளரை மறைமுகமாக ஆதரிப்பதாகவே கருதவேண்டியுள்ளது. விவசாயிகள் விமோசனம் அடையவேண்டுமானால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிக்கவேண்டும்'' என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## 'கீதா உபதேசம் தரும் பயன்'

(சுழிபுரம்)

''எங்கள் வாழ்வுக்கு வேண்டிய நல்லவற்றை நாம் தேடிப் பெற்றுக்கொள்வது கடமையாகும். நல்ல போதனைகள் நல்ல பயனைக் கொடுக்கும். கீதாஉபதேசம் மூலம் நாம் வேண்டிய பயனைப் பெற்றுக் கொள்ளலாம். அறிஞர்கள், கல்விமான்கள், மற்றும் யாவரும் கலந்து பயன்படும் வகையில் கீதை உபதேசத்தை நாம் வாரம்தோறும் விரிவுபடுத்தி யாவரும் பயன்படுமாறு செய்ய வேண்டும்''.

இவ்வாறு பொன்னாலைஸ்ரீமந்திரம் லட்சுமி பீடத்தில் ஆரம்பமாகிய கீதை உபதேச நூல் விரிவுரையை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் பிரமஸ்ரீ ச. வைத்தீஸ்வரசர்மா குறிப்பிட்டார்.

பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் நூலை வாசித்து கருத்துரை வழங்கினார்.

## கோபுரத் திருப்பணி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சிவன், ஐயனார் கோபுரங்களின் ''வானம்'' என்று சொல்லப்படும் முதலாவது அமைப்புத் திருப்பணி நாளை திங்கட்கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது.




மாவட்டசபை, மாநகரசபை தேர்தல்கல்

# 'தமிழ்ஈழ' கோரிக்கையை குமார் முன்வைக்கவில்லை'

## யாழ். எம். பி. கூறுகிறார்

[யாழ்ப்பாணம்]

''1977-ல் நடைபெற்ற பொதுத் தேர்தல், யாழ். மாநகரசபைத் தேர்தல், மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் ஆகியவற்றின்போது திரு. குமார் பொன்னம்பலம் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைக்கவில்லை''

யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் அச்சுவேலி தபால் கந்தோருக்கு முன்னால் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

''தமிழ் மக்கள் இத்தேர்தலில் ஏன் பகிஷ்கரிக்க வேண்டும்? கூடாது?'' என்ற கருத்தை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி பிரசாரக் கூட்டங்களை வடக்கு — கிழக்கு மாகாணங்களில் நடாத்தி வருகிறது.

அச்சுவேலி தபால் கந்தோருக்கு முன்பாக த. வி. கூட்டணி அச்சுவேலி கிளைத் தலைவர் திரு. பா. க. செல்வரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. யோகேஸ்வரன் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:-

''1977-ல் நடைபெற்ற பொதுத்தேர்தல், யாழ். மாநகரசபைத் தேர்தல், மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல் ஆகியன நடைபெற்றபோது, திரு. குமார் பொன்னம்பலம் ஏன் தமிழீழக் கோரிக்கையை முன்வைக்கவில்லை?

திரு குமார் பொன்னம்பலத்தின் பிரசாரக் கூட்டங்களில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். ஆர் கனகநாயகம், திரு. ஜிம்மி ராஜரத்தினம் ஆகியோர் தோன்றி தமிழ் ஈழக் கொள்கையை உறுதிப்படுத்துவார்களா?''

கோப்பாய் எம்.பி. திரு. ஆ. மு ஆலாலசுந்தரம் பேசுகையில் கூறியதாவது:-

### பண்டா - செல்வா ஒப்பந்தம்

''எந்தச் சிங்கள அரசும் ஆட்சிக்கு இதுவரை காலமும் வந்திருந்தும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை எதுவிதசாதகமான முடிவும் எடுக்கவில்லை. 1957-ல் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் பண்டா — செல்வா ஒப்பந்தம் கொண்டு வந்தபோது அதனை எதிர்த்துப் பாத யாத்திரை சென்றவர் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஏற்கனவே தமிழருக்கு இருந்த அரசியல் உரிமைச் சட்டத்தை 1972-ல் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா நீக்கிவிட்டார். இவர்கள் பதவிக்கு வந்ததும் எந்தவிதமான சாதகமான தீர்ப்பும் எங்களுக்குக் கிடைக்காது.

''ஜனாதிபதி தேர்தலில் சிங்கள அரசுக்கும் தமிழீழத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லை.''

மற்றும் திரு. மாவை சேனாதிராசா, திரு. ந இராசேந்திரம் உட்படப் பலர் உரையாற்றினர். [மா]

# நல்ல சந்தர்ப்பமாக இத்தேர்தலை பயன்படுத்துவோம்!

## நெல்லியடியில் குமார்

(கரவெட்டி)

'1975ம் ஆண்டு காங்கேசன் துறை இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற திரு. செல்வநாயகம் தமது வெற்றி 'சுதந்திர தனிநாட்டை அமைப்பதற்கான ஆணை' என்று கூறினார். இந்த ஆணையையே அவர் பாராளுமன்றத்திலும் சுட்டிக் காட்டினார். அது ஒருபுறமிருக்க 1976ம் ஆண்டு பெப்பரவரி மாதம் 6ம் திகதி 12 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தார்கள். அந்தப் பிரேரணையில் காங்கேசன் துறை இடைத்தேர்தல் சுதந்திர தனிநாட்டை உருவாக்குவதற்கு தமிழ்மக்கள் இட்ட ஆணை என்று குறிப்பிட்டார். இதன்பின்னர் 1977ல் நடந்த பொதுத்தேர்தலிலும் அந்த ஆணையையே கோரி நின்றார்கள். பொதுத்தேர்தலின் பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலும் 81ல் நடந்த மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலிலும் அந்த ஆணையையே வலியுறுத்திக் கேட்டார்கள்.

அதேவகையில்தான் நான் இன்று தமிழ்மக்களிடம் கோருவது என்னவென்றால் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் ஒரேஒரு தொகுதியாகக் கணிக்கப்படுகிறது எனவே இதை நாம் சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதி இந்த நாட்டில் தமிழ்இனம் என்று ஓர் இனம் வாழுகிறது. அதற்குப் பிரச்னை உண்டு என்பதை உலகநாடுகளுக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் திரு. குமார் பொன்னம்பலம், நெல்லியடியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பொ. ஸ்ரீதரன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

''1977 தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாகக் கூறிய போதிலும் அரசாங்கமோ அதை வடகிழக்கு மாகாணங்களின் தீர்ப்பு என்று கூறியதுடன் இடபோது வன்னிப்பிரதேச மக்களும் மட்டக்களப்பு மக்களும் தமிழ்ஈழத்தை விரும்பவில்லை என்றும் பிரசாரம் செய்து வருகிறது. இந்த நிலையில்தான் இந்தத் தேர்தலும் வந்தது இதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்த வேண்டும் என்றே நான் கூட்டணியினரைத் தேர்தலில் நிற்கச் சொல்லிக் கேட்டேன். அதன்பின்னர் என்ன நடந்தது என்பதுபற்றி தமிழ்மக்கள் அறிந்திருப்பார்கள்.''

# விவசாயக்கடன் செலுத்தாதவர் நீதிமன்றத்தில் ஆஜர்!

[யாழ்ப்பாணம்]

வேலணை, ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயக் கடன் பெற்ற விவசாயிகள் பலர் உரிய தவணையில் கடன் பணத்தைத் திருப்பிச் செலுத்தாததால் கூட்டுறவு உதவி ஆணையாளரின் உத்தரவின்மீது நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான பல வழக்குகள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடைபெற்றன. ஆண்களும், பெண்களுமாக கடன் கட்டத் தவறிய பலர் நீதிபதியின் உத்தரவில் கடன்களின் ஒரு பகுதி பணத்தைச் செலுத்தி தவணை பெற்றுச் சென்றனர்.

நீதி மன்றத்திற்குச் சமூகம் கொடுக்காத சிலர் பிணையில் செல்ல உத்தரவிடப்பட்டனர். ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. ரி. கே. என். திலகன், பலருக்கு பிடிவிறுந்துஉத்தரவு பிறப்பித்ததுடன், நீதிமன்றத்திற்கு வராமல் இருந்தவர்களை பிணையில் செல்வதற்கும் உத்தரவிட்டார். (வண்-நிரு)

## யாருடையது?

யாழ்ப்பாணம் இராஜசிங்கம் றோட்டைச் சேர்ந்த வி. அருளானந்தம் என்பவரால் யாழ். பி ஏ. தம்பி ஒழுங்கையில் கண்டெடுக்கப்பட்ட கண்டக்டர் லைசென்ஸும், பதிவேடும் ''ஈழநாடு'' அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## ச.ச. நிலையங்களின் கடமை

(தணுக்காய்)

''ஒரு கிராமத்தில் வாழும் சகல இன, மத, மொழி மக்களை ஒன்றுபடுத்தி இனங்களின் ஒற்றுமையைக்கட்டிக்காப்பதே சனசமூக நிலையங்களின் முக்கிய கடமையாகும்.

சனசமூகநிலைய எல்லைப்பரப்பில் வாழும் மக்களின் கலைகலாச்சாரம், கல்வி, பொருளாதாரம், சுகாதார சேவை உடனுக்குடன் தீர்த்து வைக்க சனசமூகநிலைய அங்கத்தவர்கள், நிர்வாகிகள் கூட்டாக செயல்பட்டுதமது கிராமத்தை வளர்ச்சி பெறச் செய்யவேண்டும்.''

இவ்வாறு யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களின் மேற்பார்வையாளர் திரு. வி. கந்தசாமி உரும்பராய் மேற்கு திருக்குமரன் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலையத் தலைவர் திரு. ச. கணேசலிங்கம் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது கூறினார்.

## 25 கோடி டாலர் உதவி

வாஷிங்டன், அக், 17.

அமெரிக்கா உலக உணவுத் திட்டத்திற்கு 25 கோடி டாலரை உதவியாக வழங்கவுள்ளது. (வெ)

**ராஜா** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
போடியார்- மௌன கீதம் படம் பார்க்க கியூவில் நின்று விலா எலும்பு உடைஞ்சு போச்சு
தங்கம்மா- நாங்களும் பெண்களோடு கியூவில் நின்று நெருக்கத்தில் என்னைத் தள்ளிப்போட்டாங்களே.
பாக்கியராஜ்-சரிதா
**மௌன கீதங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்


## நவராத்திரி விழா

[சுழிபுரம்]

வழக்கம்பரை அம்மன்கோவிலில் நவராத்திரிவிழா இன்று திங்கட்கிழமை மாலை ஆரம்பமாக நடைபெறவுள்ளது.

தினமும் மாலை அம்மனின் கொலுக் காட்சியும், விசேட சொற்பொழிவுகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.


**மனோகரா** [யாழ் நகர்]
தினசரி 4 காட்சிகள்
16-20வரை
சிவாஜி-சரோஜாதேவி
**பாகப்பிரிவினை**

சில தினங்கள் மட்டும்
**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-15 9-15
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
**ராஜபார்வை**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-காஞ்சனா
**காதலிக்க நேரமில்லை**
(புதிய பிரதி) (கலர்)

**றீகல்** (யாழ். நகர்) 5வது வெற்றி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ரஜனிகாந்த்-ரதி-ஜெய்சங்கர்
**முரட்டுக்காளை** (கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
**ரயில் பயணங்களில்**
(கலர்)

**லிடோ** [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
**லவகுச**
பாடசாலை மாணவர்க்கு விசேட ஒழுங்குசெய்து தரப்படும்

**ராணி** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி-லக்ஷ்மி-முத்துராமன்-சிவகுமார்
**ராஜராஜசோழன்**
(கலர்-சினிமாஸ்கோப்)

**வின்ஸர்** (யாழ். நகர்) குறிப்பிட்ட சிலதினங்கள்மட்டும் 2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
**பாலைவனச் சோலை**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
Daily 10-30, 2-15, 6-00, 9-30.
**A BRIDGE TOO FAR**
(War Film)


சகல அரச அலுவலகங்களிலும்

# தமிழ்மக்கள் தமிழில் தொடர்புகொள்ளவசதி!

## பரிசீலனையில் புதிய திட்டம்

[கொழும்பு]

சகல அரசாங்க அலுவலகங்களுடன் தமிழ் மக்கள் தமிழ் மொழியில் தொடர்பு கொள்ளக்கூடிய விதத்தில் புதிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில்உள்ளது. இத்திட்டம் அரசின் அங்கீகாரம் பெற்று விரைவில் அமுல் செய்யப்படும்.

பொதுநிர்வாக அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமாவின் தலைமையிலான உயர் மட்டக்குழுவே இதற்கான திட்டத்தைத் தயாரித்து அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

இன்றைய அரசியல்அமைப்பு விதிகளுக்கு இணங்க உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டம் அமுலுக்குவந்ததும் அரசாங்க அலுவலகங்களுடன் தமிழ் மக்கள் கசலரும் சகல துறைகளிலும் தமிழ் மொழியிலேயே தொடர்பு கொள்ள முடியும்.

மேற்படி உயர் மட்டக் குழுவில் பொதுநிர்வாக அமைச்சருடன் வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத் முதலி, கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டுஅமைச்சர் ஜனாப் ஏ ஸி. எஸ் ஹமீட், உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரை, சட்ட மா அதிபர் திரு. சிவா பசுபதி ஆகியோர் அங்கம் வகிக்கும் குழுவே மேற்படி திட்டத்தை தயாரித்தது [இ]

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 1-ம் திகதி
திங்கட்கிழமை
(18—10—82)

மேடம்: குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும் நீண்டநாள் பூமிப்பிணக்கில் சமரசமான முடிவுகிடைக்கும் காதல்விவகாரங்கட்கும் இன்று சிறப்பானதினம்.

இடபம்: திரை மறைவில் சதித்திட்டம் உருவாகும் அடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவார்கள் கடற்றொழிலாளர்கள் அதிக கவனம் செலுத்தவும்.

மிதுனம்: உங்கள் நடவடிக்கைகளில் தனிச்சிறப்புத் தென்படும் பெரியவர் ஒருவர் உங்கட்கு கைகொடுத்து உதவுவர் பிதாவழித்தனமும்சேரும்.

கடகம்: தொழில் துறையில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்துக்கு வழிகோலப்படலாம். இதன் மூலம் பதவியில் உயர்வு கிடைக்கலாம் போட்டிகாண்பதற்கு ஏற்ற தினம்.

சிங்கம்: முயற்சியால்உயர்ச்சி உண்டு. பணவிவகாரங்களில் நல்ல திருப்பம் ஏற்படும் வீட்டில் சுபகருமங்கள் இடம்பெறலாம் சுகபோக நாள்.

கன்னி: வணிகர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும். வீணை சிந்தனையால் வேதனைப் படுவீர்கள் சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

துலாம்: மனப்போராட்டம் அதிகரிக்கும் உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம் இதன்மூலம் கைகலப்பும் ஏற்படலாம். பிள்ளை ஒன்றின் உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

விருட்சிகம்: ஒளிமயமான சூழ்நிலை உருவாகும் வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும் இருமனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும்.

தனு: அவசரப்போக்கு சிக்கலைத் தோற்றுவிக்கும் மனதில் விரக்திமனப்பான்மை ஏற்படலாம். வீண் சிந்தனையால் சோர்வும் தென்படலாம்.

மகரம்: வாழ்க்கையில் சில முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும். வாகனவிருத்திக்கும் இடமுண்டு நீர்ப்பாசனப் பகுதியில் கடமையாற்றுவர்கட்கு சிறப்பானதினம்.

கும்பம்: தெளிந்த மனம் தேடியது கிடைக்கும் தெய்வசிந்தை அமைதியுடன் ஆனந்தமான வாழ்வும் உண்டு. புத்திரவழி சுகமுண்டு.

மீனம்: தூரத்து பயணம் துயரத்தைத் தரலாம் வருமானத்தில் வீழ்ச்சி தென்படும் வைத்தியச் செலவுக்கும் இன்று இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

"வடபகுதியில் குவிக்கப்பட்டிருக்கும்

# மேலதிக இராணுவத்தை அகற்ற நடவடிக்கை!"

## சங்கானை கூட்டத்தில் விநோதன்

(பண்டத்தரிப்பு)

"தாம் ஜனாதிபதிதேர்தலில் வெற்றிபெற்றால் 24 மணி நேரத்தில்பயங்கரவாததடைச் சட்டத்தை நீக்குவேன் என்றும் வடபகுதியில் குவிக்கப்பட்டிருக்கும் மேலதிகஇராணுவத்தை இங்கிருந்து அகற்றுவேன் என்றும் எம்மிடம் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ உறுதியளித்துள்ளார். அவரை வெற்றியடையச் செய்வதன் மூலம் யாழ்ப்பாணத்தை மீண்டும் மீண்டும் எரிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்க முடியும்"

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி (இடது) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரித்து நேற்று மாலை சங்கானை பஸ் நிலையத்திற்கு அருகாமையில் நடத்திய பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. கு. விநோதன் குறிப்பிட்டார், திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. விநோதன் தொடாந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"இத்தேர்தலின் அரசியல் முக்கியத்துவத்தை உணர்ந்து எமது கட்சி வேட்பாளரை ஆதரிக்க முன்வந்த இலங்கை கம்யூனிஸ்கட்சி இடதுயினரை மிகவும் பாராட்டுகின்றேன். தமிழர் விடுதலைக்கூட்டணி இத்தேர்தலில் எவரையும் பகிரங்கமாக ஆதரிக்க முடியாத நிலையில் இருந்தால் தமிழ் மக்களை தமது மனச்சாட்சியின் பிரகாரம வாக்களியுங்கள் என்று கூறியிருக்கலாம். இந்த ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் தான் மூன்று தடவை யாழ்ப்பாணம் எரிக்கப்பட்டது. நாடளாவியமுறையில் இனக்கலவரங்கள் அடுத்தடுத்து நடைபெற்றது. இவ்வாறு பல அட்டுழியங்கள் நடைபெற்றும், தமிழர் விடுதலைக்கூட்டணியினர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஜனாதிபதி தேர்தலில் தமக்கு அக்கறையில்லை என்று கூறுததும், பகிஷ்கரியுங்கள் என்று பிரசாரம் செய்வதும் எமக்கு கவலையளிப்பதாக உள்ளது. எந்தவிதமான அதிகாரங்களும் இல்லாத மாவட்ட அபிவிருத்திச்சபைகளை பெற்று எமது பகுதியில் நல்ல முறையில் சேவைசெய்யக்கூடி நிலையில் இருந்த கிராமசபைகளையும், பட்டினசபைகளையும் அறவே இயங்கமுடியாது செய்து குழப்பிவிட்டனர். இந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகளிலும் பார்க்க அதிக வலுவுள்ள பிரதேசசபைகள் பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருந்தது. அதை நடைமுறைப்படுத்த விடாது தீவிர பிரசாரம்

(8-ம் பக்கம் பார்க்க)


**சாந்தி - யாழ். நகர்**

600 படங்களுக்கு மேல் நடித்து உலகசரித்திரம் படைத்த பிரேம்நசிரின் மகன் ஷா நவாஸ், "சுவரில்லாத சித்திரங்கள்" புகழ் சுமதி, கவர்ச்சித்தாரகை மாயா ஆகியோரின் உயர்ந்த நடிப்பில்......
ஸ்ரீ கருமாரியம்மன் கிரியேஷன்ஸ் அளிக்கும்

**பாதைமாறிய பருவங்கள்**

"பெண்கள் என்றால் தெய்வம்" என்ற இந்துமதத்தின் உயர்ந்த தத்துவத்தை உதாசீனம் செய்த பருவக்காளையின் உணர்ச்சிக் காவியம்!

இசை: மோகன் ராஜ் — தயாரிப்பு: ஸ்ரீஸ்கந்தராஜா — டைரக்ஷன்; எஸ். தேவேந்திரா

தினசரி 10-30, 02-30, 06-30 09-45 காட்சிகள்



# "யாழ் குடாநாட்டில்இராணுவ அடக்குமுறை ஆட்சி நடக்கிறது"

## பேராசிரியர் ஒஸ்மன்ட் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

'யாழ். குடாநாட்டில் இராணுவம் குவிக்கப்பட்டு அடக்குமுறை ஆட்சி இடம்பெற்று வருவதை நான் சென்ற இடங்களிலெல்லாம் பார்க்கக் கூடியதாகவிருந்தது இந்த இராணுவ அடக்குமுறை ஆட்சியிலிருந்து வடபகுதி மக்கள் விடுபட விரும்பினுல் அவர்கள் தங்கள் வாக்குகளை ஐ தே கட்சிக்கு எதிராக அளிக்கவேண்டும்.'

இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும், கொழும்புப் பல்கலைக்கழக பௌதீகவியல் பேராசிரியருமான ஒஸ்மன்ட் ஜெயரத்ன 'ஈழநாடு' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

'யாழ். நகரில் சில தினங்களுக்கு முன்னர் தீக்கிரையான கடைகளைச் சென்று பார்வையிட்டேன். மின்சார ஒழுக்கினுல் இவை தீக்கிரையானதென்பதை நம்பமுடியாதுள்ளது. யாழ் நகரில் இதற்கு முன்னரும் பல கடைகள் தீக்கிரையாகியுள்ளன. யாழ். பொதுசன நூல் நிலையம், 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம், மற்றும் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டது அநாகரிகமான செயலாகும். இது குறித்து நான் மனவருத்தமடைவதுடன் வெட்கமும் அடைகிறேன்.

"தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைகளைப் பெறுவதற்காக எமது கட்சியுடன் இணைந்து போராடவேண்டும். தென்பகுதியில் நாம் நடத்துகின்ற போராட்டங்களுக்குத் தமிழ் மக்கள் ஆதரவளிக்க வேண்டும். வடபகுதி இளைஞர்களுக்கு மட்டுமன்றி தென்பகுதியிலுள்ள இளைஞர்களுக்கும் பல பிரச்னைகள் உண்டு. வடபகுதி இளைஞர்கள் பலர் இன்று எவ்வித விசாரணைகளுமின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்: அண்மையில் விடுதலை செய்யப்பட்ட டேவிட்சன் திரு.என்ற இளைஞர் மீது எந்த விதமான குற்றச் சாட்டும் சுமத்தப்படாது இருவாரம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

"யாழ். குடாநாட்டில் இன்று இராணுமத்தினரின் பயங்கரவாத ஆட்சி இடம் பெற்றுவருகிறது. பல தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரின் சித்திரவதைக்குள்ளாகியுள்ளனர். இவற்றை முற்றாக ஒழிக்க வேண்டுமானுல் தமிழ் மக்கள் தமது வாக்குகளை ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு எதிராக உபயோகிக்க வேண்டும்" என்றுர்.

# நின்புகழ்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

னர். எழுபது ஆசிரியர்கள் கற்பித்தனர். ஸ்கந்தா ஒரு பெருங் குடும்பம் ஆகிறது. எல்லோருடைய வாழ்விலும் தாழ்விலும் பங்கு பற்றி நின்றுர் அதிபர். அன்பினுல் எதனையும் சாதிக்கலாம் என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டு ஸ்கந்தாவின் அன்றைய உயர்ச்சி.

மாணவர் பலருக்கும் இலவசவிடுதி வாழ்வும் கிடைத்தது. மலையக மாணவர் பதின்மருக்கு ஆண்டுதோறும் இலவச விடுதிவழங்கினுர் அதிபர். பல்கலைக்கழகத்தில் தெரிவுசெய்யப்பெறும் மாணவருக்குக் கற்பதற்கு நிதியுதவி வழங்கவும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் அதிபர் முனைந்து வெற்றிகண்டார். அவர் காலம் ஸ்கந்தாவின் பொற்காலம். பல்வேறு அரசியற் கட்சிக்காரரும் ஸ்கந்தாவில் கற்பித்தனர். ஆனல் அரசியலுக்காக எவ்வித மறியலோ போராட்டமோ ஸ்கந்தாவில் நிகழவில்லை. யாழ்ப்பாணக் குடா நாட்டிலோ அல்லது இலங்கையில் வேறிடங்களிலோ புரட்சிபுரிந்து திசை கலங்கி நின்ற மாணவர்களையும் வழுக்கி வீழ்ந்த இளைஞர் பலரையும் விடுதியில் அமர்த்து கல்விகற்கவழிசெய்தவர் அதிபர் துணிவு மிகுந்த தேறற். பண்டிதர் வித்துவான் பட்டம் பெற்ற ஆசிரியர்களைத் தமது கல்லூரியின் ஆசிரியராக்கினுர். பண்டிதர் வித்துவான் பட்டம் பெற்றவர்க்கு ஏனைய பட்டதாரிகள் பெறும் சம்பளம் வழங்க வேண்டுமென்று அரசினரிடமும் ஆசிரிய சங்கங்களிலும் வாதிட்டு ஓரளவு வெற்றியும் கண்டவர் இவரே. அதிபர் சுப்பிரமணியம் அகிலஇலங்கை ஆசிரிய சங்கத்தின் உபதலைவர்களின் ஒருவராகவும் விளங்கினர். வடஇலங்கை ஆசிரிய சங்கத்தின் (N.P.T.A.) தலைவராகவும் விளங்கினர். சமாதான நீதிபதிகள் நீதிக் குழுக்கள் செய்யமுடியாத காரியங்களைத் தனித்து நின்று தமது கூரிய மதிநுட்பத்தாலும் சந்தர்ப்பத்துக் கேற்ப சாதுரிய நடைமுறைகளினுலும் செய்து முடித்தவர் அதிபர் இவருடைய வெற்றிகளுக்கெல்லாம் துணையாகத் தெய்வம் உதவியது. சிறந்த முருக பக்தரான இவருடைய குடும்பம் இவருடைய மனம்போல் உயர்ந்து நிற்கிறது. நல்ல மனைவி வாய்க்கப்பெற்றவர் அதிபர் பிள்ளைகள் ஐவர். அளவாகப்பிறந்து அழகாக வாழ்கிருர். பிள்ளைகள் கணக்காளர், அதிபர், பொறியியலாளர், வைத்தியர் பதவிகளில் அமர்ந்துள்ளனர். மருமக்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர், வைத்தியர்கள் பதவி வகிக்கின்றனர். குடும்பம் மங்களகரமாக ஓங்கிவளர்கிறது. குலதெய்வமாகிய மானி - மருதடிப்பிள்ளையார் துணையும் ஒன்று முண்டு மாணவர்களும் நண்பர்களும் அன்பர்களும் என்றும் வாழ்த்த அதிபர் இனிது வாழ்கின்றர் எண்பது வயதிலும் அங்கும் இங்கும் சுறுசுறுப்புடன் திரிகின்றர் அதிபர் நல்லூர் முருகனை அடிக்கடி தொழுகிருர். அவர் அறிவில் முதியவர் ஆற்றலில் பெரியவர் கரும வீரர் பரோபகாரி ஆளுமை நிரம்பிய அதிபர் இவற்றுக்கும் மேலாக அதிபர். சுப்பிரமணியம் மனிதாபிமானம் நிரம்பிய நல்ல வல்ல மனிதன்.


# ஹோம் பிறுன்ஸ் லிமிட்

## (யாழ்ப்பாணம்)

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட், 82, கன்ஞதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறுன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

**I. சாயமூட்டிய பொப்பிளின்**

**II. வெள்ளை பொப்பிளின்**

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**ஹோம் பிறுன்ஸ் லிமிட்**

82, கன்ஞதிட்டி வீதி,

யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்

**ஹோம் பிறுன்ஸ் லிமிட்**

463, காலி வீதி, கொழும்பு-3


# "தமிழீழப் போராளிகளுக்கு தமிழீழம் ஒன்றே வாழ்வு தரக் கூடியது"

## டாக்டர் 'தர்மர்' அறிக்கை

[யாழ்ப்பாணம்]

"ஒரு ஜனதிபதியைத் தெரிவதற்கான தேர்தலுக்கு இன்னும் இரண்டே இரண்டு நாட்கள்தான் எஞ்சியுள்ளன. தமிழ் மக்கள் எங்ஙனம் வெளியார் தலையீடு இல்லாது தமது தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக் கொள்வதற்கு ஒரு தேசிய இனத்துள்ள அடிப்படை ஜனநாயக உரிமையான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி நிற்கிருர்களோ, அது போன்றே சிங்கள ஸ்ரீலங்காவின் சிங்கள மக்களுக்குத் தமது ஜனதிபதியார் என்பதை வெளியார் தலையீடு இல்லாது தீர்மானிக்கும் உரிமையை மதிக்கவும் தெரிந்திருக்கிருர்கள் என்பதை உலகுக்குப் பறைசாற்ற எதிர் வரும் ஜனதிபதி தேர்தல் பயன்படவேண்டும்"

இவ்வாறு, தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் ச.அ.தர்மலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: வெங்காயத்துக்கு உரிய விலை கிடைக்குமா? மிளகாயின் சந்தை விலை ஏறுமா? கடைசியாக நடந்த பொதுவேலை நிறுத்தத்தில் தமது தொழிற்சங்கத் தலைவர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டு வேலை பறி போனவர்களுக்கு மீண்டும் வேலை தரப்படுமா? இவையெல்லாம் ஜனதிபதி தேர்தலைப் பொறுத்தவரை முக்கிய பிரச்னைகளேயல்ல. தந்தை ஈ. வே. ரா. பெரியாரின் வார்த்தையில் சொல்லப் போனுல், இவையாவும் சுத்த வெங்காயப் பிரச்னைகள். ஜீவமரணப் போராட்டத்தை எதிர்நோக்கும் தமிழீழப் போராளிகளுக்கு தமிழீழம் ஒன்றே வாழ்வு தரக்கூடியது அதனை வென்றெடுக் ஜனதிபதி தேர்தலில் வாக்களிப்பது பெரும் முட்டுக்கட்டையாக, தடையாக அமைந்து விடும்."

# மேலதிக...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

செய்து கண்டியாத்திரை சென்ற ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மறைமுகமாக ஆதரவு வழங்குவது போல நடந்து கொள்ளுகின்றனர். இன்று நாட்டிலுள்ள முக்கிய பத்திரிகைகள் எல்லாம் ஐ. தே. க. வுக்கு ஆதரவான செய்திகளை திட்டமிட்டு பிரசுரித்து வருகின்றன. மக்கள் இது பற்றி சிந்தித்து இந் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு–உள்நாட்டுஉற்பத்திக்கு பாடுபடக் கூடியவரான திரு. ஹெக்டர் கொப்பேகடுவாவிற்குவாக்களித்து வெற்றியடையச் செய்யவேண்டும்".

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இட்து) பிரிவைச் சேர்ந்த திரு. கே. செந்தில்வேல் உரையாற்றுகையில்; "ஐக்கியதேசியக்கட்சியின் பொருளாதாரக் கொள்கை வெளிநாட்டு மூதலாளிகளுக்கும் உள்நாட்டில் ஒரு சில முதலாளிகளுக்கும் நன்மையளிப்பதாக இருக்கின்றது. இந்நாட்டிலுள்ள சாதாரண மக்களுக்கு பலத்த கஷ்டங்களை ஏற்படுத்தி நாட்டில் குவிக்கப்பட்டுள்ள விலையுயர்ந்த பொருட்களை வாங்க சக்தியற்ற நிலையில் கீழ்நிலைப்படுத்தியுள்ளது. சொந்த மண்ணில் தேசிய பொருளாதார வளத்தை கட்டிஎழுப்புவதற்கு யு என். பி. அரசு தவறிவிட்டது. உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்காது வெளிநாட்டு ஆடம்பரப் பொருட்களுக்கு ஒரு விற்பனைத்தளமாக இந்த நாட்டை மாற்றி அந்நியர்கள் எம்மை சுரண்டுவதற்கு இந்த அரசு வழிவகுத்தது. இந்நாட்டின் தொழிலாள வர்க்கம் போராடிப்பெற்ற பல ஜனநாயக உரிமைகளை இந்த அரசே பறித்தது. இதனுல் தான் யு. என். பி. யைத் தோற்கடிக்கக்கூடிய சக்தி வாய்ந்த ஓரே ஒரு கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு வாக்களிக்குமாறு மக்களைஎமது கட்சிவேண்டுகின்றது" என்றுர்

சட்டத்தரணி திரு. சோ. தேவராசா, திரு வை. வன்னியசிங்கம், வட்டுக்கோட்டைத்தொகுதி சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. வி இராசசுந்தரம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினுர்கள் திரு இராசா நன்றியுரை நிகழ்த்தினுர்.

# 'ஐ.தே.க. அரசாங்ககாலத்தில் வடக்கு,கிழக்கு அபிவிருத்தி'

(மண்டைதீவு)

"இதுவரை எந்த அரசாங்கமும் செய்யாத அபிவிருத்தி வேலைகளையும் வேலைவாய்ப்புகளையும் ஐ.தே. கட்சி அரசாங்கம் செய்துள்ளது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் மிகுந்த அக்கறைகொண்டுசெயல்பட்டு வரும் இன்றைய அரசுக்கு மக்கள் நன்றிக்கடன்செலுத்தக் கடமைப்பட்டவர்களாவர்

இவ்வாறு ஜனதிபதி தேர்தலையொட்டி ஐ தே. கட்சி வேட்பாளர் திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனவுக்கு ஆதரவுகோரி அல்லைப்பிட்டியில் திரு. செ. நடேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னுள் யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 'தீவுப்பகுதியெங்கும்நாற்பத்திரண்டு ஆயிரம் வாக்காளர்கள் இருக்கின்றுர்கள். அவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு வாக்கு அளிக்கவேண்டும். இப்பகுதியில்பலர் வேலையில்லாது இருப்பதை நான் அறிவேன். அவர்களுக்குவேலைவாய்ப்புபெற்றுக் கொடுக்கமுயற்சிப்பேன்"

# புதிய அனுபவம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்திருப்பதாக அறிவித்த பின்னர், முதல்தடவையாக கோர்ட்டில் குட்டிமணி ஆஜராகியிருந்தார்.

நாஷனலும் வேட்டியும் அணிந்து குட்டிமணி நீதிமன்றத்துக்கு வந்திருந்தார்.

"என்ன, பாராளுமன்றத்துக்கு வருவதுபோல் வந்திருக்கிறீர்?" என்று சிரித்துக் கொண்டே குட்டிமணியைப் பார்த்து திரு. எம். சிவசிதம்பரம் கேட்டார்.

"பத்திரிகையில் என்னைக் கூட்டணி தெரிவுசெய்துள்ள விஷயத்தை பார்த்தேன்" என்று குட்டிமணி சிவாவிடம் தெரிவித்தார். (இ)

# இராணுவ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஞல் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் வாந்தி எடுத்த வைத்திய உதவி கோரியும் பதினுன்காம் திகதிதான் இராணுவ டாக்டர் வந்து பார்வையிட்டு மருந்து எழுதிக்கொடுத்தார். ஆனுலும் இன்றுவரை மருந்துகள் வழங்கப்படவில்லை. அதற்குப்பதிலாக பதினைந்தாம் திகதி இராணுவத்தினரால் தாக்கபபட்டுள்ளார். இதுசம்பந்தமாக சட்டத்தரணி சி வி.விவேகானந்தன் சம்பந்தப்பட்ட முகாம் அதிகாரிக்கு முறையிட்டுள்ளார் இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, மருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யவும்' என்றும் மேற்படி தந்தியில் சட்டத்தரணி சந்திரகாசன் கோரியுள்ளார்.


# மரண அறிவித்தல்

## இளையதம்பி கோபாலசிங்கம் J. P.

(சட்டத்தரணி–நொத்தாரிஸ்)

யாழ்ப்பாணம் றக்கா வீதி 13-ம் இலக்கத்தைச் சேர்ந்த சட்டத்தரணி இளையதம்பி கோபாலசிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக்கணவரும், பிரியதாஷினி, விஜயதர்ஷினி, சுவர்ணதேவி, ரஞ்சினிதேவி, சிவயோகினி லண்டன்) ஆகியோரின் அருமைத்தந்தையும், ஸ்ரீசண்முகநாதன் [குவைத்], கனகலிங்கம் [கட்டிட ஒப்பந்தகாரர்], பாலச்சந்திரன் [மின்சாரசபை கொழும்பு] உலகநாதன் [உரிமையாளர் பிறிலியன்ற் நகைமளிகை யாழ்ப்பாணம்], ஹரிகரன் [லண்டன்] ஆகியோரின் மாமனுருமாவார்.

20-10-82 புதன்கிழமை காலை அன்னுரின் இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் காலை 10-00 மணிக்குத் தகனக்கிரியைக்காகச் செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

[4875]


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box, 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.